விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii


பக்கங்கள்: பதின்னான்கு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 ஆவணி 12 வெள்ளிக்கிழமை (28.08.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 252




# யாழில் ஒருமாத காலத்துக்குள் 1500 குடும்பங்கள் மீள் குடியமர்வு

## யாழ்.அரச அதிபர் அறிவிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் ஒரு மாத காலத்திற்குள் ஆயிரத்து 500 குடும்பங்கள் மீள் குடியமர்த்தப்பட்டுள்ளதாக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் வடக்கின் வசந்தம் மாநாட்டில் அறிவித்தார். (14ஆம் பக்கம் பார்க்க)

## 2211 குடும்பங்களின் விபரம் அடையாளம் காணப்பட்டன

(யாழ்ப்பாணம்)

வவுனியா நலன்புரி நிலையங் களிலுள்ள யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 2 ஆயிரத்து 211 குடும்பங்களின் விபரங்கள் பிரதேச செயலாளர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளதாக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

இவ்வாறு அடையாளம் காணப்பட்ட மக்களின் விபரங்கள் பொலிஸ் பாதுகாப்பு அனுமதிக்காக இன்று அனுப்பி வைக்கப்படுமென அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் யாழ். அரச அதிபர் க.கணேஷ் (14ஆம் பக்கம் பார்க்க)

## மாவிலாற்றில் ஆரம்பித்த சேவை யாழ்ப்பாணத்தில் நிறைவடைந்தது

### பசில் எம்.பி. தெரிவிப்பு

(மறவன்புலோ)

ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் மாவிலாற்றில் ஆரம்பமான மனிதாபிமான சேவை இன்று யாழ்ப்பாணத்தில் நிறைவடைந்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினரும் வடக்கின் வசந்தம் செயலணியின் தலைவருமான பசில் ராஜபக்ஷ தெரிவித்தார். நேற்று மறவன்புலோவில் இடம் பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது;

யாழ். மாவட்ட மக்களின் முக்கியமான நாள் இன்றாகும். இதற்கான வழியை ஏற்படுத்தித்தந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் இராணுவத்தினருக்கும் பொலிஸாருக்கும் நன்றியை (14ஆம் பக்கம் பார்க்க)

## பிரி. நாடாளுமன்ற உறுப்பினர் லியாம் பொக்ஸ் இலங்கை விஜயம்

(கொழும்பு)

பிரித்தானிய கன்சவேட்டிவ் கட்சியின் நாடாளு மன்ற உறுப்பினரும், நிழல் வெளி விவகார அமைச்சருமான லியாம் பொக்ஸ் நேற்று இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார்.

நேற்று பகல் 12.50 க்கு அவர் கட்டுநாயக்க விமானநிலையத்தை வந்தடைந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இவரே முன்னர் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவிற்கும், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிற்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கையை ஏற்படுத்த காரணமாக இருந்தவர்.

பின்னர், அதேபோன்ற உடன்படிக்கையை ரணில் விக்ரமசிங்கவுக்கும், தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும் இடையில் ஏற்படுத்துவதற்கு கடந்த வருடம் அவர் முயற்சிகளை (14ஆம் பக்கம் பார்க்க)

## பிரிட்டிஷ் அமைச்சர் இன்று யாழ். வருகை

(யாழ்ப்பாணம்)

பிரிட்டனின் நிழல் பாதுகாப்பு அமைச்சர் கலாநிதி லியாம் பொக்ஸ் இன்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளனர்.

யாழ்ப்பாண நகரின் அபிவிருத்தி குறித்து அவர் ஆராயவுள்ளதாகத் தெரிவிக் கப்பட்டது. இன்று யாழ்ப்பாணத்துக்கு வரும் அவர் யாழ். அரச அதிபர் க.கணேஷ் மற்றும் சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான குழுவினரைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளார். (ச-5)

## அரசியல் தீர்வை வழங்குவதில் ஜனாதிபதி மகிந்த உறுதியாகவுள்ளார்

### அமைச்சர் டக்ளஸ் மறவன்புலோவில் உரை



(மறவன்புலோ)

தமிழ் மக்களின் வாழ்க்கையை முன்னேற்றுவதற்கும் அரசியல் தீர்வை வழங்குவதிலும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெளிவாகவுள்ளார் என சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

மறவன்புலோவில் நேற்று நடைபெற்ற, புதிதாக மீள வழங்கப்பட்ட விவசாய நிலங்களில் காலபோக நெற்செய்கையை ஆரம்பிக்கும் நிகழ்விலே உரையாற்றுகையிலேயே அமைச்சர் (13ஆம் பக்கம் பார்க்க)

## 'சனல்-4'இன் ஆதாரத்தை வைத்து இலங்கை மீது போர்க்குற்ற வழக்கு

(பிரித்தானியா)

பிரித்தானியாவில் ஒளி பரப்பாகும் சனல்-4 தொலைக்காட்சி வெளியிட்ட காணொளி ஆதாரத்தை வைத்துக் கொண்டு இலங்கை மீது போர்க்குற்ற வழக்குகள் தொடரமுடியும் என்று பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் மருத்துவர் இராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நேற்று வியாழக்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது;

இலங்கையில் பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்ற முறையில் தமிழ் இனத்தையே அழித்துக் கொண்டிருக்கும் சிங்களப் போர்ப்படையினரின் செயற்பாடுகள் மற்றும் எல்லையற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து திடுக்கிடும் தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன.

பிரித்தானியாவின் சனல்-4 என்றதொலைக் காட்சி நிறுவனம் ஆதாரபூர்வ மான புகைப் படங்களை (14ஆம் பக்கம் பார்க்க)

## பிரிட்டன் அரசிடம் முறையிட இலங்கை அரசு தீர்மானம்

(லண்டன்)

படையினருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் ஊடகங்களில் வெளியான இந்த ஒளிக்கீற்று போலியானது என்று மீண்டும் மறுத்துள்ள இலங்கை அரசாங்கம் இது குறித்த செய்தியை முதலில் வெளியிட்ட சனல் 4 நிறுவனத்திற்கு எதிராக பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் முறைப்பாடு செய்யப்போவதாக கூறியுள்ளது.

இது தொடர்பாக இராஜதந்திர ரீதியிலான முறையான (14ஆம் பக்கம் பார்க்க)

### உள்ளே...

அதிபர் சேவை தரம் 2-1 இலிருந்து 1ற்கு பதவியுயர்வு பெற்றவர்களின் பெயர் விபரம்...




நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அதிபர் சேவை தரம் 2-1 இலிருந்து 1க்கு வடக்கில் 122 அதிபர்களுக்கு பதவி உயர்வு

அதிபர் சேவை தரம் 2-1 இலிருந்து 1க்கு பதவி உயர்வு பெற்ற வட மாகாணத்தைச் சேர்ந்த 122 அதிபர்களின் விபரம் வெளியாகி உள்ளது. நாடளாவிய ரீதியில் 9 ஆயிரம் அதிபர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் முகமட்தம்பி வலம்புரிக்கு தெரிவித்தார்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் தயாரிக்கப்பட்டுவருவதாகவும் அவை விரைவில் அனுப்பி வைக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வட மாகாணத்தில் பதவி உயர்வு பெற்ற 122 அதிபர்களின் பெயர் விபரங்கள் சிங்கள மொழியில் வெளியிடப்பட்டுள்ளன. வட மாகாணத்தில் பதவி உயர்வு பெற்ற அதிபர்களின் விபரம் வருமாறு;

**வலிகாமம்**

வி.சிவசுந்தரம், பி.இரத்தினசபாபதி, ஆர். சண்முகநாதன், கே.இராசநாயகம், எஸ்.சர்வேஸ்வரன், எஸ்.பஞ்சாட்சரம், வி.கணேஷ்வரலிங்கம், எஸ்.சிவகுமார், எம்.ஜெயக்குமார், கே.சந்திரசேகரம், எஸ்.சிவநாதராஜா, வி. ஆறுமுகமூர்த்தி, கே.சிவநாதன், பி.வடிவேல், எம்.சொர்ணலிங்கம், எஸ்.சந்திரகுமார், வி.சிறிசாந்தன், எஸ்.நாகையா, ரி.சண்முகசுந்தரமூர்த்தி, எஸ்.தர்மசோதி, என்.சிவகடாட்சம், வி.நாகரட்ணம், எம்.நகேந்திரசீலன், எஸ்.மணியம், கே.நடராஜன், வி.மோகநாதன், எஸ்.சிவகணேசசுந்தரம், வி.சிவஞானேஸ்வரன், ரி.சுப்பிரமணியம், எ.நடராஜா, எஸ்.லோகேஸ்வரன், கே.மகேந்திரலிங்கம்.

**வடமராட்சி**

எஸ்.சுந்தரமூர்த்தி, வி.கோபால கிருஸ்ணன், எஸ். வல்லிபுரம், கே. தர்மகுலசிங்கம், வி.சிறிசேகரசிவமூர்த்தி, எஸ்.தென்புனலிங்கம், வி.வெற்றிவேல், எஸ்.அரியலிங்கம், வி. கணேசமூர்த்தி, ஐ. நடராஜா, வி.புறஞானந்தன், ஜே.வரதராஜா, ஏ.மகேஸ்வரன், வி. நாவேந்தன், எஸ். பாக்கியராஜா,

**தென்மராட்சி**

என்.அருட்சோதி, வி.தெய்வேந்திரமூர்த்தி, எஸ். நிதிநாயகம், டபிள்யு. திருநாவுக்கரசு

**வேலணை**

ஏ.கிருஸ்ணன், எஸ்.பொன்னம்பலம், ஏ.கமலகரன், ஐ.சிவதாஸ், கே.இலங்கைநாயகம், எஸ்.வேலாயுதபிள்ளை

**யாழ்ப்பாணம்**

ஆர்.சிவபாதசேகரம், எம்.வேதநாதன், ஜே. எஸ்.பஸ்தியாம்பிள்ளை, எஸ்.இராமலிங்கம், எஸ்.மாணிக்கவாசகர், எஸ்.நடராஜலிங்கம், ஆர்.குலசிங்கம், ஆர்.வேல்செல்வன், எம்.ஞானப்பிரகாசம், எம்.செபஸ்தியாம்பிள்ளை, கே.பரமேஸ்வரன், சிவஞானேஸ்வரன், நடராசா, வடிவேலு, துரைசிங்கம், சோமேஸ்வரம்பிள்ளை, ராஜரத்தினம், விஜயகுமார், சிவநேசன், பாலகுமார், செல்வநாயகம், அருணாசலம், ஞானகாந்தன், சண்முககுமார், கணபதிப்பிள்ளை, மகேஸ்வரன், கமலநாயகி, சகாதேவன், ராஜசேகரம், செபஸ்தியாம்பிள்ளை, பரமநாதன், செல்லையா, சோமசேகரம், தர்மரத்தினம், வாமதேவன், கணேஸ்வரன், சிவபாதசுந்தரம், விவேகானந்தன், கே.எஸ். தகவத்லிங்கம், ராமச்சந்திரா, சந்திரசேகரம், வடிவேலு, துரைசிங்கம், அருட் சகோதரி ஜி.செல்வராணி

**வெளிமாவட்டங்கள்**

கே.சிவஞானம் (வவுனியா தெற்கு), என். சோமஸ்கந்தராஜா (வவுனியா தெற்கு), என்.சுந்தரநடராஜன் (வவுனியா தெற்கு), எம். சிவஞானம் (வவுனியா தெற்கு), எஸ்.சுந்தரராஜா (வவுனியா தெற்கு), வி. ஜேசுதாசன் (மடு), கே. தியாகலிங்கம் (வவுனியா தெற்கு), ஆர். மாணிக்கம் (வவுனியா தெற்கு), என். தயானந்தன் (வவுனியா தெற்கு), பி. குருஸ் (வவுனியா தெற்கு), வி. ஜெகநாதன் (வவுனியா தெற்கு), எஸ். சகாயராசா (வவுனியா தெற்கு), எஸ்.செல்வரட்ணம் (மன்னார்), டபிள்யூ.இந்திரன் (வவுனியா தெற்கு), நடனசண்முகதாஸ் (வவுனியா தெற்கு), எஸ். இராசநாயகம் (வவுனியா தெற்கு), எஸ். விஸ்வலிங்கம் (வவுனியா தெற்கு), கே. பாலேந்திரன் (வவுனியா தெற்கு), ஜே. தர்மகுலசிங்கம் (வவுனியா தெற்கு), எம்.ஐ.முதுமுகமட் (வவுனியா தெற்கு), ஆர்.குமாரவேல் (கிளிநொச்சி).

**(பதவி உயர்வு பெற்றவர்களின் பெயர்கள் சிங்கள மொழியிலிருந்து தமிழ் மொழிக்கு மாற்றம் செய்யப்பட்டதில் தவறுகள் இடம் பெற்றிருக்கலாம். சிங்களமொழியிலான பெயர்ப் பட்டியலை வலம்புரி காரியாலயத்தில் பார்வையிடலாம்)**

# வின்ணப்பம் கோரல்

## சமூக விஞ்ஞான சான்றிதழ் கற்கை நெறி

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் 2009/2010 ஆம் கல்வியாண்டுக்கான சமூக விஞ்ஞான சான்றிதழ் கற்கைநெறி ஆரம்பமாகவுள்ளது.

இக் கற்கை நெறிக்கான தகைமை எதுவுமில்லை. மாணவர்கள் 18 வயதினைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும். இவற்றுக்குரிய விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிராந்திய நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்ப முடிபுத் திகதி 11.09.2009 ஆகும்.

மேலதிக விபரங்களை யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய அறிவித்தல் பலகையில் பார்வையிடலாம் என இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

## சமூக விஞ்ஞான பட்டக் கற்கைநெறி

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் 2009/2010 கல்வியாண்டுக்கான சமூக விஞ்ஞான கலைப் பட்டக் கற்கை நெறி ஆரம்பமாகவுள்ளது.

இக் கற்கை நெறிக்கான தகைமை ஆகக் குறைந்தது க.பொ.தா உயர்தரத்தில் ஒரே தடவையில் 3 பாடங்கள் (பழைய பாடத்திட்டம் எனின் 4 பாடங்கள்) சித்தியடைந்திருத்தல் வேண்டும். மாணவர்கள் இதற்குரிய விண்ணப்பப் படிவங்களை யாழ். பிராந்திய நிலையத் தில் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்ப முடிபுத் திகதி 11.09.2009 ஆகும்.

மேலதிக விபரங்களை யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய அறிவித்தல் பலகையில் பார்வையிடலாம் என இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ச)

# வலிகாமத்திலுள்ள 2000 ஏக்கர் காணி விரைவில் விடுவிக்க நடவடிக்கை

## ஆளுநர் சந்திரசிறி உறுதியளிப்பு

(மறவன்புலோ)

வலிகாமம் பகுதிகளில் உள்ள 2 ஆயிரம் ஏக்கர் காணியையும் விரைவில் விடுவிக்க நடவடிக்கை எடுப்பேன் என வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்தார்.

மறவன்புலோவில் நேற்று நடைபெற்ற புதிதாக விடுவிக்கப்பட்ட விவசாய நிலங்களில் காலபோக நெற்செய்கையை ஆரம்பிப்பதற்கான நிகழ்வில் உரையாற்றுகையிலேயே வட மாகாண ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு ஆளுநர் மேலும் உரையாற்றுகையில்;

மறவன்புலோ, தனங்கிளப்பு பகுதிகளில் தற்போது ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பு விவசாய நிலங்களே மீள வழங்கப்பட்டுள்ளது. எனினும் மீதமுள்ள 2 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்புடைய விவசாய நிலங்களை விரைவில் விவசாயிகளிடம் மீள வழங்க நடவடிக்கை எடுப்பேன்.

இதன் மூலம் யாழ்.மாவட்டத்தின் நெல் விளைச்சல் அதிகரிக்கப்படும். அத்துடன் இன்று ஆரம்பித்து வைக்கப்படும் விவசாய நடவடிக்கைகள் செழிப்புடன் இடம்பெற வாழ்த்துகின்றேன் என்றார். (ச-5)

# போன் கடை உடைத்து பொருட்கள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர் நவீன சந்தைப் பகுதியிலுள்ள கே.கே தொலைபேசி விற்பனை நிலையத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு திருட்டுச் சம்பவம் இடம் பெற்றுள்ளதாக உரிமையாளர் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

கடையின் மேற்பகுதியை உடைத்து கடைக்குள் புகுந்த திருடர்கள் அங்கிருந்த 116 புதிய கையடக்கத் தொலைபேசிகள், லப்ரொப் கணனி ஒன்று மற்றும் அயன் சேவிற்குள் இருந்த 2 இலட்சத்து 22 ஆயிரம் ரூபாய் பணம் உட்பட 12இலட்சத்து 77ஆயிரம் ரூபாய் வரையிலான பொருட்களை திருடிச் சென்றுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இவற்றுடன் திருத்துவதற்காக கடையில் வைக்கப்பட்டிருந்த தொலைபேசகளும் திருடப்பட்டுள்ளதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இத்திருட்டுச் சம்பவம் தொடர்பாக பொலிஸ் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-14)

# யாழ். நகரில் இருந்து இரவு நேர பஸ் சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பஸ் நிலையத்திலிருந்து ஏனைய பிரதேசங்களுக்கு இரவுநேர பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வட பிராந்திய போக்குவரத்து சபை அறிவித்துள்ளது.

வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வரும் பயணிகளின் நன்மை கருதியே இச்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வவுனியா விலிருந்து யாழ்ப்பாணத்துக்கு புறப்படும் பஸ்கள் இரவு 11 மணியளவிலேயே யாழ்.நகரை வந்தடைகின்றன.

இதனால் பயணிகள் தமது இடங்களுக்கு செல்வதில் பல்வேறு அசௌகரியங்களை எதிர் கொள்கின்றர். இந்நிலையில் அவர்களின் நன்மை கருதி இரவுநேர பஸ் சேவை ஆரம்பிக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ச-5)


# அரசாங்க அறிவித்தல்

## சிற்றுண்டிசாலை நடாத்துவதற்கான கூறுவிலை கோரல்

நாவற்குழி அரச உணவுக்களஞ்சியத்தில் அமைக்கப்பட்டுள்ள சிற்றுண்டிசாலையினை நடாத்துவதற்கான முத்திரையிடப்பட்ட (Sealed) கூறுவிலைகள் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரினால் கோரப்படுகின்றது.

இச் சிற்றுண்டிசாலையினை நடாத்துவதற்கு விரும்புபவர்கள் விண்ணப்பப்படிவத்தை புனர்வாழ்வு கிளையில் பெற்று தபால் உறையின் மேல் மூலையில் 'சிற்றுண்டிசாலையினை நடாத்துவதற்கான கூறுவிலை' என குறிப்பிட்டு 10.09.2009-ம் திகதி காலை 10 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு புனர்வாழ்வுப்பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் நேரடியாக அல்லது பதிவுத்தபால் மூலம் சீல் (Seal) இடப்பட்ட கடித உறையில் தங்களது கூறுவிலைகளை சமர்ப்பிக்குமாறு கோரப்படுகிறார்கள்.

சிற்றுண்டிசாலை நடாத்துவதற்கான நிபந்தனை, மற்றும் விபரங்களை அறிய விரும்புபவர்கள் மாவட்ட செயலக புனர்வாழ்வுக் கிளையில் வேலை நாட்களில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 3.00 மணி வரை பெற்றுக்கொள்ள முடியும்.

*கூறுவிலைகள் 10.09.2009-ம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு திறக்கப்படும். இதில் கூறுவிலை சமர்ப்பித்தவர் அல்லது அவரின் பிரதிநிதி சமுகமளித்திருக்க முடியும்.*

*கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.*

**க.கணேஷ்,**
**அரசாங்க அதிபரும்/மாவட்ட செயலரும்.**
**யாழ்.மாவட்டம்.** (C-3171)



## அகஸ்தியர் வைத்தியசாலை மீண்டும் யாழில்... புதுப்பொலிவுடன்...

7வது, 8வது யாழ்ப்பாண பரம்பரை முறைகள் சித்த ஆயுர்வேத முறைகள் மூலமாக இந்தியா, இலங்கையின் அதிசிறந்த விசேட மருந்துகள் மற்றும் பரம்பரை மருந்துகள் மூலமாக நீரிழிவு, மாதவிடாய்க் கோளாறுகள், மாதவிடாயின் போது வலி, மகப்பேறின்மை, உடற்பருமன், சிறுவர் நோய்கள் மற்றும் முடக்குவாதம் (Rhumatic pain) நாரிப்பிடிப்பு, கழுத்து அசைக்க முடியாமை, கை,கால் தூக்க முடியாமை போன்றவற்றை Neuropathy சிகிச்சை மூலமும் பூரணமாக குணப்படுத்துவதில் புகழ் பெற்ற அகஸ்தியர் வைத்தியசாலை நீண்ட காலத்தின் பின்னர் அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க தனது சொந்த இடத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

**தொடர்புகளுக்கு:** Medical officer in charge
Dr.K.V Thurairajah DAM, RAMP
Regd No : 11080
T.P:- 0775809812

(3333)


# வட மாகாண விளையாட்டுப் போட்டி தொடர்பான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடத்தப்படவுள்ள 2009ஆம் ஆண்டுக்கான வட மாகாண விளையாட்டுப் போட்டி தொடர்பான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் செயலக அலுவலகத்தில் அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் யாழ்.மாவட்ட பிரதேச செயலக பிரதேச செயலர்கள், விளையாட்டு உத்தியோகத்தர்கள், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர், கல்வி உதவிப் பணிப்பாளர்கள்(விளையாட்டு), வேம்படி மகளிர் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, சென்.சாள்ஸ் ம.வி., சென். ஜோன்ஸ் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி, சென்.பற்றிக்ஸ் கல்லூரி, மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி, ஊர்காவற்றுறை சென்.அன்ரனிஸ், யாழ்.திருக்குடும்ப கன்னியர் மடம் ஆகிய பாடசாலைகளின் அதிபர்கள்,

சென். ஜோன்ஸ் முதலுதவிப் படையணிப் பணிப்பாளர், செஞ்சிலுவைச் சங்க தலைவர், யாழ்.மாநகர சபை ஆணையாளர் ஆகியோரை தவறாது மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார். (ச)

# இன்று ஒரு தகவல்

## துரியோதனன்

துரியோதனனின் அரண்மனைக்கு எதிரிலுள்ள ஒரு மண்டபத்தில் துரியோதனன் மனைவி பானுமதியும் கர்ணனும் அமர்ந்து சொக்கட்டான் ஆடிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆட்டம் மிகவும் மும்முரமாக நடந்து கொண்டிருக்கிறது. அந்த சமயத்தில் அங்கு துரியோதனன் வருகிறான்.

அவன் வருவது கர்ணனுக்குத் தெரியவில்லை. ஏனெனில் அவன் முதுகுக்குப் பின்பக்கமாக இருந்து துரியோதனன் வருகிறான். எதிரில் உட்கார்ந்திருக்கும் பானுமதி கணவன் வருவதைப் பார்க்கிறாள். மரியாதைக்காக எழுந்து கொள்ள முற்படுகிறாள்.

ஆனால் அதைப்பார்த்த கர்ணன், "சொக்கட்டான் ஆட்டத்தில் தான் தோற்று விடுவோம் என்று பயந்து இவள் பாதி ஆட்டத்தில் எழுந்து போக நினைக்கிறாள்" என்று நினைக்கிறான்.

அந்த எண்ணத்தில் அவன், அவள் இடையில் அணிந்திருந்த மேகலையைப் பிடித்து இழுத்து விடுகிறான். உடனே அந்த ஆபரணம் கீழே விழ அதிலிருந்து முத்துக்களெல்லாம் தரையில் நாலா பக்கமும் சிதறி ஓடின.

அதன் பின் தான் கர்ணன் தனக்குப் பின்னால் துரியோதனன் வந்திருப்பதை தெரிந்து கொள்கிறான். கர்ணனும் பானுமதியும் திகைத்துப் போய் நிற்கிறார்கள்..

கணவர் இந்தக் காட்சியைப் பார்த்து விட்டாரே! என்ற பதற்றம் பானுமதிக்கு. 'மாற்றான் மனைவியைத் தொட்டு விட்டோமே' என்ற பதற்றம் கர்ணனுக்கு.

ஆனால் துரியோதனன் இதைப் பற்றிக் கொஞ்சம் கூட அலட்டிக் கொண்டதாக தெரியவில்லை. இது எதையும் அவன் கண்டு கொள்ளவேயில்லை. மாறாக, அவன் இவர்கள் இருவரையும் பார்த்து என்ன கேட்கிறான்?

"இந்த முத்துக்களை எடுக்கட்டுமா, கோர்க்கட்டுமா?" என்று சிரித்துக் கொண்டே கேட்கிறான். இந்த கேள்வியால் தான் இப்பொழுது ஒரு சந்தேகம்!

கர்ணன் துரியோதனனுக்கு நண்பன். அந்த நட்பு காரணமாக துரியோதனன் தரையில் சிதறிய முத்துக்களை மட்டும் பொறுக்கி எடுத்திருக்கலாம். அதற்குப் பின் அதைக் கோர்த்து ஆபரணமாக்கித் தருவதற்கு அரண்மனையில் எத்தனையோ பேர் இருக்கிறார்கள்; ஆதலால் இவன் "எடுக்கட்டுமா?" என்று கேட்டதோடு விட்டிருக்கலாம். "கோர்க்கட்டுமா?" என்று கூடுதலாக ஒரு கேள்வியைக் கேட்டானே? அது ஏன்?

அரண்மனையிலிருந்த எல்லோரும் இதைபற்றியே யோசித்துக் கொண்டிருந்தனர்.

அங்கிருந்த அமைச்சருக்கும் இதற்கு விடை தெரியவில்லை. எல்லோரும் தலையைப் பிய்த்துக் கொண்டிருந்த சமயத்தில்... நல்ல வேளையாக சகாதேவன் தற்செயலாக அந்தப் பக்கம் வந்து கொண்டிருந்தான்.

அவன் சாஸ்திர ஞானத்தில் கரை கண்டவன். ஆதலால் எல்லோரும் சகாதேவனிடம் ஓடிச்சென்று தங்களைக் குழப்பிக் கொண்டிருந்த சந்தேகத்தைத் தெரிவித்தனர்.

சகாதேவன் சிரித்துக் கொண்டே பதில் சொன்னான். அவன் சொன்ன விளக்கம் இதுதான்.

"ஒருவனுக்கு பயம் அதிகமானால் அவனுக்கு கை கால் நடுங்கும்! அது இயற்கை. அதுபோலவே எவனொருவன் ஆத்திரப்படுகிறானோ அவனுக்கும் கை, கால் நடுங்கும் உதறும்!"

இந்த இடத்தில் கர்ணனும் பானுமதியும் இந்த நிலையில் இருக்கிறார்கள். அதாவது பயம் காரணமாக அவர்களின் கைகால் நடுங்குகிறது!

துரியோதனனுக்கு இந்த இடத்தில் ஆத்திரம் காரணமாக கை, கால் நடுங்க வேண்டும். ஆனால் அப்படி ஆகவில்லை அவன் நிதானமாக, அமைதியாக இருக்கிறான்.

அதற்கு காரணம் என்ன? அவன் தன்னுடைய மனைவியையும் சந்தேகப்படவில்லை. தன்னுடைய நண்பனையும் சந்தேகப்படவில்லை. அதனால் ஆத்திரம் அடையவில்லை. கை, காலும் உதறவில்லை.

என் கை, கால் நடுங்கவில்லை... ஆதலால் என்னால் எடுக்கவும் முடியும் – கோர்க்கவும் முடியும் ; நான் நிதானமாகத் தான் இருக்கிறேன் என்பதை அவர்களுக்கு உணர்த்துவதற்காகத்தான் துரியோதனன் "கோர்க்கட்டுமா?" என்று கூடுதலாக ஒரு கேள்வியைக் கேட்டான்.

இதுதான் சகாதேவன் சொன்ன விளக்கம். அவசரப்பட்டு ஆத்திரப்பட்டு நிதானம் தவறக் கூடாது. அமைதியை இழக்கக்கூடாது என்பதை இதிலிருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

கெட்டவன் என்று நாம் பொதுவாக நினைக்கும் துரியோதனிடமும் இப்படி ஓர் உயர்ந்த குணம் இருந்திருக்கிறது பார்த்தீர்களா?

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# நலன்புரி முகாம் மக்களின் வாக்குகளை பலாத்காரமாக பெற்றுக்கொள்ளும் நோக்கமில்லை

## அமைச்சர் அனுரபிரியதர்சன யாப்பா தெரிவிப்பு

(கொழும்பு)

வவுனியா நலன்புரி முகாமில் உள்ள தமிழ் மக்களின் ஒரு லட்சத்து 75 ஆயிரம் வாக்குகளை பலாத்காரமாகப் பெற்றுக்கொள்ளும் நோக்கம் அரசாங்கத்திற்கு இல்லை என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் அனுரபிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலிலும் நாடாளுமன்ற தேர்தலிலும் இடம்பெயர்ந்த மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்காகவே எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை அரசாங்கம் அங்கு செல்லவிடாது தடுத்து நிறுத்தியுள்ளதாக எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களால் கூறப்படுவது பொய்யான தகவல் என்றும் அவர் கூறினார்.

கொழும்பில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற அமைச்சரவை முடிபுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கருத்து வெளியிட்ட அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா,

நாடாளுமன்ற உறுப்பினர்களான டாக்டர் ஜயலத் ஜயவர்தனா, மனோ கணேசன் ஆகியோர் அரசாங்கத்திற்கு எதிராக தவறான பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாகக் குற்றம் சாட்டினார்.

பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் வவுனியாவுக்கு சென்று நலன்புரி முகாமில் உள்ள இடம்பெயர்ந்த மக்களை சந்தித்து உதவியளிப்பதற்கு எவருக்கும் உரிமை உண்டு எனவும் அரசாங்கம் யாருக்கும் தடை விதிக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் ஐக்கிய தேசிய கட்சி கூறுவது போன்று இடம்பெயர்ந்த மக்களை உடனடியாக சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்த முடியாது என்றும் அங்கு கண்ணிவெடிகள் உண்டு என்றும் இது பற்றி ஐக்கிய தேசிய கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு போதிய அறிவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

இடம்பெயர்ந்த மக்களை மீள குடியமர்த்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. மக்களுக்கு தேவையான உதவிகளும் செய்யப்படுகின்றன.

இந்த நிலையில் இடம்பெயர்ந்த மக்கள் தொடர்பாக எதிர்க்கட்சிகள் தவறான விமர்சனங்களை மேற்கொண்டு வருவது ஏற்புடையதல்ல என்றும் அமைச்சர் சுட்டிக் காட்டினார். (ஓ-6)

# புதிய அதிபர்களுக்கு பயிற்சி வழங்க கல்வி அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

கிராமப்புற அரச பாடசாலைகளில் புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ள அதிபர்களுக்கு பயிற்சி வழங்க கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவின் பணிப்புரைக்கமைய புதிய அதிபர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாக அமைச்சின் சிரேஷ்ட அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார்.

இப்பயிற்சி வழங்குவதற்காக 5.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் பயிற்சிக் காலத்தின் போது பாடசாலை முகாமைத்துவம் மற்றும் சட்ட திட்டங்கள் தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாகவும் பயிற்சி வழங்குவதற்காக பின்தங்கிய நிர்வாக மாவட்டங்களிலிருந்து அதிபர்கள் தெரிவு செய்யப்படவுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

இதேவேளை திறமை மற்றும் மூப்பு அடிப்படையில் நாடளாவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட ஏறக்குறைய ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட சிங்கள, தமிழ் மொழி மூல பாடசாலை அதிபர்களுக்கு இலங்கை அதிபர் சேவை தரம் 1 க்கான பதவி உயர்வுக் கடிதங்கள் இம்மாதம் கல்வி அமைச்சில் வைத்து வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

# இராசி பலன்

28.08.2009
(ஆவணி 12, வெள்ளிக்கிழமை)
அட்டமி முற்பகல் 9.51 மணிவரை
அனுசம் முற்பகல் 9.59 மணிவரை
இராகுகாலம் 10.35-12.05 மணிவரை
சுபநேரம் 6.05-7.35 மணிவரை
அட்டமி நவமி.

| | |
|---|---|
| மேடம் | எதிர்பாராத பகை, காரிய தடங்கல், பணக்குறைவு, ஆரோக்கியக் குறைவு. |
| இடபம் | குடும்ப நன்மை, காரிய சித்தி, பாராட்டு, தெய்வதரிசனம். |
| மிதுனம் | சுவாரஸ்யம், தடைப்பட்ட காரியம் கைகூடும், சுகநலன், தெய்வசிந்தை. |
| கடகம் | குடும்பக் கவலை, திடீர் நன்மை, விவாதம், பணக்குறைவு. |
| சிங்கம் | தெய்வதரிசனம், நல்ல முயற்சி, போசன சுகம், நண்பர்கள் சந்திப்பு. |
| கன்னி | காரிய நன்மை, தெய்வதரிசனம், பணவருவாய், உடல் நலம். |
| துலாம் | காரிய தாமதம், வீண்பகை, போசன சுகக்குறைவு, தனவிரயம். |
| விருச்சிகம் | தெய்வசிந்தை, உறவினர் வருகை, நல்ல முயற்சி, போசன சுகம். |
| தனுசு | இடமாற்றம், வாக்கு மேன்மை, எடுத்த காரியம் தாமதமாகும், சுபசெலவு. |
| மகரம் | எடுத்த காரியம் கைகூடும், செல்வாக்கு, பொருள் சேர்க்கை, ஆரோக்கியம். |
| கும்பம் | அதிகாரம், நல்ல செய்தி, தொழில் விருத்தி, தெய்வ தரிசனம். |
| மீனம் | கட்டுப்பாடு, எதிர்பாராத செலவு, முயற்சி தாமதம், உறவினர் சந்திப்பு. |


வளவன்




சைவபரிபாலன சபை நாவலர் சோலை முன்பள்ளியின் விளையாட்டுப் போட்டியில் வினோத உடை போட்டியில் பங்குபற்றிய மாணவர்களையும், சபை உறுப்பினர்களையும் படத்தில் காணலாம்.

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்


| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 50 | 30 |
| உருளைக்கிழங்கு | 110 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 40 | 50 | 50 |
| தக்காளி | 10 | 20 | 15 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 40 |
| கோவா | 80 | 100 | 80 |
| கரட் | 80 | 90 | 100 |
| பூசணி | 30 | 40 | 30 |
| புடோல் | 15 | 25 | 30 |
| வாழைக்காய் | 30 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 45 | 50 | 40 |
| பெரிய வெங்காயம் | 50 | 60 | 60 |
| பாகற்காய் | 30 | 45 | 40 |
| வெண்டிக்காய் | 15 | 25 | 40 |
| கரணைக் கிழங்கு | 35 | 5 | 60 |
| பயிற்றங்காய் | 50 | 0 | 40 |
| லீக்ஸ் | 50 | 6 | 80 |
| பீற்றூட் | 30 | 40 | 40 |
| கறிமிளகாய் | 40 | 50 | 40 |
| முருங்கைக்காய் | 120 | 140 | 120 |
| கீரை - 1 பிடி | 20 | 25 | 15 |
| தேசிக்காய் | 30 | 45 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 25 | 30 | 25 |









தென்மராட்சி மறவன்புலோவில் புதிதாக விடுவிக்கப்பட்ட விவசாய நிலங்களில் கால போக நெற்செய்கையை ஆரம்பிப்பதற்கான நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கின் செயலணித் தலைவர் பசில் ராஜ பக்ஷ மற்றும் சமயத் தலைவர்கள் மங்கல விளக்கேற்றுவதை மேலுள்ள படங்களிலும் நிகழ்வில் கலந்து கொண்ட பிரமுகர்கள் மற்றும் விவசாயிகளுக்கான நிதியுதவியை வட மாகாண ஆளுநர், யாழ். கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் மார்க் ஆகியோர் வழங்குவதை இரண்டாவது படத்திலும் விவசாய நிலங் களில் பிரமுகர்கள் நெற்செய்கையை ஆரம்பித்து வைப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்ட மக்களையும் மற்றைய படங்களிலும் காணலாம்.







அல்லைப்பிட்டி மற்றும் மண்கும்பான் பகுதி மக்கள் வேலணை பிரதேச செயலர் மற்றும் யாழ். செயலக பிரதி திட் டப்பணிப்பாளர் ஆகியோர் முன்னிலையில் மீள்குடியமர்த் துவதற்காக பஸ்களில் ஏற்றப்படுவதை படங்களில் காணலாம்.






வடக்கின் வசந்தம் மீளாய்வுக் கூட்டம் நேற்று யாழ். பொது நூலகத்தில் நடைபெற் றது. இதில் கலந்து கொண்ட யாழ். அரச அதிபர் க.கணேஷ், பிரிட்டிஷ் தூதுவர் பீற்றர் கெய்ஸ், வடக்கின் வசந்தம் செயலணித் தலைவர் பசில் ராஜபக்ஷ, சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோரையும் நிகழ்வில் கலந்து கொண்ட அமைச்சின் செயலாளர்கள் மற்றும் திணைக்கள தலைவர்களையும் படங்களில் காணலாம்.

## இலங்கை மின்சாரசபை ஊழியர்கள் அரசுக்கு எதிராக பாரிய ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

மின்சார திருத்தச் சட்டமூலத்தை ரத்துச் செய்தல் உள்ளிட்ட மூன்றுகோரிக்கைகளை முன்வைத்து, இலங்கை மின்சாரசபை ஊழியர்கள் நேற்று முன்தினம் பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை நடத்தினர்.

அரசாங்கத்தினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கின்ற இலங்கை மின்சாரசபை திருத்தச்சட்டமூலமானது, நுகர்வோரையும் சபை ஊழியர்களையும் பாதிக்கின்ற வகையில் தயாரிக்கப்பட்டிருப்பதாக குற்றம் சாட்டி ஆர்ப்பாட்டக்காரர்கள், மின்சார சபை ஊழியர்களின் உரிமைகளில் அரசு கை வைக்கக்கூடாது என்றும், அத்துடன் மூன்று வருடங்களுக்கு ஒருமுறை வழங்கப்படுகின்ற சம்பள உயர்வினை வழங்குமாறும் வலியுறுத்தி கோஷமிட்டனர்.

இதன்போது, நூற்றுக் கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள் எதிர்ப்பு வாசகங்கள் அடங்கிய பதாகைகளைத் தாங்கியிருந்தனர்.

இதேவேளை, நாடு பொருளாதார ரீதியில் சிக்கல்களை எதிர்கொண்டிருப்பதால் அரச ஊழியர்களுக்கானஇவ்வருட சம்பள உயர்வு வழங்கப்படமாட்டாது என்றும், இன்றைய ஆர்ப்பாட்டம் உரிமைகளைப் பெறுவதற்காக அல்லாது அரசியல் நோக்குடனேயே ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் மின்வலு எரிசக்தி அமைச்சர் ஜோன் செனவிரட்ன கடந்த செவ்வாய்க்கிழமை தெரிவித்திருந்த கருத்துக்களுக்கும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

(ஓ-6)

## முன்னாள் பொலிஸ் அத்தியட்சகருக்கு ஐந்து ஆண்டுகள் சிறைத்தண்டனை

(கொழும்பு)

1989 ஆம் ஆண்டு கடத்தல் தொடர்பான குற்றம் புரிந்த, முன்னாள் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டக்ளஸ் பீரிஸிற்கு ஐந்து ஆண்டு கால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

1989 ஆம் ஆண்டு இரண்டு சகோதரர்களை கடத்திச் சென்ற குற்றத்திற்காக பொலிஸ் அத்தியட்சகர்க்ள் டக்ளஸ் பீரிஸ் மற்றும் நான்கு பொலிஸ் அதிகாரிகளுக்கு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக பரீசிலனை செய்யப்பட்ட இந்த வழக்கின் தீர்ப்பு நேற்று முன்தினம் அளிக்கப்பட்டுள்ளது. கம்பஹா நீதவான் சமன் விக்ரமராச்சியினால் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

காமினி ரத்நாயக்க, ஜயரத்ன, ரணதுங்க மற்றும் ரஞ்சித் ஜயசேகர ஆகியோரே தண்டனை விதிக்கப்பட்ட ஏனைய காவல்துறை உத்தியோகத்தர்களாவர். (ஓ-6)

## அரசாங்க ஊழியர்களுக்கு அடுத்த வருடம் சம்பள உயர்வு

### அமைச்சர் சரத் அமுனுகம அறிவிப்பு

(கொழும்பு)

அமைச்சுக்கள் உட்பட எந்தவொரு அரச துறைகளுக்கும் தனித் தீர்மானங்களுக்கு அமைவாக சம்பளத்தை அதிகரிக்கவோ, பெற்றுக்கொள்ளவோ முடியாது.

அரச சேவை கள் ஆணைக்குழு காலாவதியாக உள்ளதால் சம்பள நிர்ணய ஆணைக்குழுவின் ஊடாக அடுத்த ஆண்டில் சகல அரச ஊழியர் களுக்கும் குறிப்பிட்ட தினத்தில் பொதுவான சம்பள உயர்வுகள் வழங்கப்படும் என்று பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச் சர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

யுத்தம் முடிவடைந்து வடக்கு -கிழக்குப் பகுதிகளில் உள்ளூராட்சி சபைகள் இயங்க ஆரம்பித்துள்ளமையால் அப்பிரதேசங்களில் காணப்படும் பொதுநிர்வாக ஊழியர்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்து கொள்ள அடுத்தாண்டில் பொதுநிர்வாக ஊழியர்களின் எண்ணிக்கையினை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

பொதுநிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் சரத் அமுனுகம மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்தும் தெரிவிக்கையில் கூறியதாவது,

இலங்கையில் உள்நாட்டு நிர்வாகத் துறையில் காணப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதில் ஏற்பட்ட காலதாமதமே, அரச சேவைகள் பொதுமக்களை சென்றடைவதில் சிக்கல்கள் ஏற்படக் காரணமாக அமைந்தது.

பொது நிர்வாக ஊழியர்களுக்கான பரீட்சைகள் குறிப்பிட்ட தினத்தில் நடைபெறாமல் காணப்பட்டமையும் பொது நிர்வாகத் துறையில் வெற்றிடங்கள் ஏற்பட பிரதான காரணமாக அமைந்தது.

பரீட்சைத் திணைக்களமும் பாடசாலை மாணவர்களுக்கான பரீட்சைகள் உட்பட பொதுவான பரீட்சைகளுக்கு அப்பாற்பட்ட அரச துறைகளினது உள்ளகப் பரீட்சைகளை நடத்தவேண்டிய நிலை ஏற்பட்டமையினால் சகல துறைகளிலுமே குழப்பநிலை தோன்றியிருந்தது.

ஆனால் தற்போது பொதுநிர்வாகத் துறைகளில் ஏற்பட்ட மாற்றங்களினால் பொதுப்பரீட்சைகளைத் தவிர, ஏனைய அரச துறைகளில் நடத்தப்படும் உள்ளகப் பரீட்சைகளில் பரீட்சைத்திணைக்களம் தலையிடாது.


எனவே, அரச சேவைகள் யாவும் பொது நிர்வாக அமைச்சின் கீழ் கண் காணிக்கப்படக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. பொது நிர்வாகத்துறையில் ஐந்து வருடங்களுக்கு மேல் கடமையாற்றுபவர்கள், வேறு திணைக்களங்களுக்கோ அரச நிறுவனங்களுக்கோ மாற்றப்படுவார்கள்.

இதனால், சகல துறை அனுபவமும் பெற சகலருக்கும் சந்தர்ப்பமும் கிடைக்கும் என்றார்.

(ஓ-6)

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா

## அடிமைச்சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை



ஆனால் அவர் அரசுடன் முரண்பட்டு எல்லாவற்றையும் இழந்தபோது ஏமாற்றமும் கவலையும் அடைந்தார். மீண்டும் அவரின் நிலை திருந்தி இழந்த அதிகாரம் திரும்பி வந்தபோதும் குடியும் கூத்தும் அவரை விட்டு நீங்கவில்லை. ஒன்யாங்கோ மகன்மீது வைத்திருந்த கோபமும் நம்பிக்கையீனமும் அவரின் மரணப்படுக்கையிலும் தொடர்ந்தது.

கடைசி நாள்இருவரும் ஆளை ஆள் பார்த்துக்கொண்டு நின்றனர். அவரின் மூடிய கண்களில் "நீ என்னை ஏமாற்றி விட்டாயே!" என்ற கழிவிரக்கம் தொக்கிக் கிடப்பது போல இருந்தது. பெருமூச்சு அவனைச் சுடுவது போல வெளி வந்தது. அத்துடன் அவரின் உயிர் அடங்கியது.

பாட்டி சொன்ன கதையைக் கேட்டபின் ஒபாமா வீட்டின் பின்புறம் போனார். அங்கே இரண்டு கல்லறைகளுக்கு இடையில் நின்று நீண்ட கனவுலகில் பிரவேசித்தார்.

அவரின் தாத்தாவும் தந்தையும் முறையே அவரின் மனத் திரையில் நிழலாடினர். நிலத்திலிருந்து கொண்டு கல்லறையின் மேல் பதிக்கப்பட்டிருந்த மஞ்சள் நிறக் கற்களைத் தடவினார். "ஓ என் தந்தையே" என்று கதறி அழுதார். நீண்ட நேரமாக இரு கல்லறைகளுக்கு இடையில் மண்டியிட்டு இருந்தவாறே அழுதார்.

அவரின் உணர்வுகள் எல்லாம் கண்ணீராக கன்னங்களில் வெள்ளமென வழிந்தோடின. அதன்பின் அமைதி அவரின் ஆன்மாவையும் உடலையும் ஆரத்தழுவி அணைத்துக்கொண்டது. தான் யார், தனக்குள்ள அக்கறை என்ன என்பது புத்தியாலோ அல்லது வார்த்தைகளாலோ சொல்லும் தரமன்று.

அமெரிக்காவில் தன் வாழ்வு இந்த இடத்தில் இருக்கும் சிறிய நிலத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளதை உணர்ந்தார். தனது வேதனை தன் தந்தையினது, தன் வினாக்கள் தன் சகோதரர்களினது, அவர்களின் போராட்டம் தனது பிறப்புரிமை என்று உணர்ந்து கொண்டார்.

ஒபாமா மேலும் இரு வாரங்கள் கென்யாவில் தங்கினார். நைரோபிக்கு பாட்டி, ஔமா சகிதம் திரும்பி வந்தனர். எல்லோரும் சேர்ந்து புகைப்படம் ஒன்று எடுத்துக்கொண்டனர். றோய் வோஷிங்டனுக்கு பறந்துவிட்டார். பாட்டியும் தன் இரண்டாவது இல்லம் எனப்படும் குடிசைக்குத் திரும்பிவிட்டாள்.

ஔமாவும் ஒபாமாவும் தங்கள் தந்தையின் கடைசி மகன் ஜோர்ஜை அவன் படிக்கும் பாடசாலை யில் போய்ப் பார்த்தனர். அதன் பின் மொம்பாஸா சென்று அங்கு பார்க்க வேண்டிய வரலாற்று முக்கியம் வாய்ந்த இடங்களைப் பார்த்துத் திரும்பினர்.

ஒபாமா அமெரிக்கா திரும்பியதும் ஹார்வாட் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து தனது சட்டக் கல்வியைத் தொடர்ந்தார். மூன்றாண்டுகள் படித்துப் பட்டம் பெற்றபின் சட்ட நிறுவனம் ஒன்றில் சேர்ந்து உழைத்தார். அது சிக்காகோவில் இருந்தது.

இந்த சட்ட நிறு வனத்தில்தான் மிசேல் என்ற சட்ட வல்லு நரான இளம் பெண் வேலை செய்து வந்தாள். இவளின் தாய் மேரியன். தந்தை விறேசர் றொபின்சன். இவர் நகர நீரிறைக்கும் இயந் திரத்தை இயக்குபவர். அதாவது ஒரு மெக் கானிக்.

மிச்சே என்று செல்லமாக அழைக்கப்படும் மிசேலுக்கு கிறேக் என்றொரு அண்ணன் இருக்கிறான். **119**

சிக்காகோவில் வறியவர்கள் வாழும் பகுதியான தென்கரை மாவட்டத்தில் உயர்ந்த அடுக்கு மாடியில் அமைந்துள்ள ஒரேயொரு அறையைக் கொண்ட ஏழைகள் வாழும் வீடொன்றை வாடகைக்கு எடுத்து வாழ்ந்து வந்தனர்.

அவர்களின் வாழ்வு பணக்கஷ்டம் நிறைந்தது. ஆயினும் குடும்பம் அன்பும் பண்பும் உடையது. வறுமையிலும் செம்மையான வாழ்வு. தந்தை ஒருவித புதுமையான தோல் வியாதியால் அவதிப்பட்டார். ஆயினும் நாளாந்த கூலி வேலை செய்து தங்கள் நான்கு பேர் கொண்ட குடும்பத்தை ஒருவாறு வாழச் செய்தார்.

தாய் மேரியன் நல்ல குடும்பப் பெண். குழந்தைகளை கண்ணும் கருத்துமாக ஆனால் கண்டிப்பாக வளர்த்தாள். நாளொன்றில் அவர்களை ஒரேயொரு மணித்தியாலம் தான் ரி.வி. முன் இருந்து பார்க்கலாம் என்ற வரையறையை தாண்ட அனுமதிக்கவில்லை. மேல்நிலைப் பள்ளிப் படிப்பு முடிந்ததும் மிசேல் பிறின்ஸ்டன் பல்கலைக்கழகத் துக்கு தெரிவுசெய்யப்பட்டு புலமைப்பரிசில் பெற்று படித்தாள்.

### ஐம்பொன்

அங்கு கறுப்பு மாணவர்கள் சிலராயினும் அவர்களுக்கு வெள்ளையர்களால் கொடுக்கப்பட்ட துன்பங்கள் அறிந்தும் அவற்றையெல்லாம் தாண்டி சிறப்புச் சித்தியுடன் தன் பட்டப்படிப்பை முடித்தார்.

அதனைத் தொடர்ந்து ஹாவார்ட் பல்கலைக்கழகம் சென்று சட்ட நிபுணராக வெளியேறினார். (தொடரும்)

# வன்னியில் நாள் ஒன்றுக்கு 60 சதுர கிலோ மீற்றர் பரப்பிலேயே கண்ணி வெடிகள் அகற்றப்படுகின்றன

## சர்வாத்ரா அமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

வன்னியில் கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டிருக்கும் இந்தியப் படையினரால் ஒரு நாளைக்கு 60 முதல் 70 சதுர கிலோ மீற்றர் பரப்பளவையே சுத்திகரிக்க முடிகிறது என சர்வாத்ரா அமைப்பு தெரிவித்துள்ளது.

இயந்திரங்களின் துணையுடன் தாம் பணிகளை மேற்கொள்வதால் இவ்வளவு விரைவாகச் செயற்பட முடிகிறது எனவும் இதுவே மனிதவலுவைப் பயன்படுத்தி மேற்கொண்டால் ஒரு நாளைக்கு 10 சதுர கிலோ மீற்றர் பரப்பளவையே சுத்திகரிக்க முடியும் எனவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து சிறிலங்காப் படையினர் கைப்பற்றிய நிலப்பகுதியில் கண்ணிவெடிகளை அகற்றும் பணிகளில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த அமைப்புக்கள் ஈடுபட்டு வருகின்றன. இந்தியாவின் சர்வாத்ரா அமைப்பும் முன்னாள் இந்தியப் படையினரையும் உள்ளூர் வாசிகளையும் இணைத்து கடந்த 2003ஆம் ஆண்டில் இருந்து அந்தப் பணியில் ஈடுபட்டு வருகின்றது.

பெரிய அணைக்கட்டுப் போன்ற ஒரு கிலோ மீற்றர் பரப்பளவில் மட்டும் 14 கவச எதிர்ப்பு கண்ணிவெடிகளைத் தாம் மீட்டதாக அந்த அமைப்புத் தெரிவித்துள்ளது.

மன்னாரின் நெல்வயல்களில் கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் தற்போது சர்வாத்ரா ஈடுபட்டுள்ளது. மழை காலத்துக்கு முன்னதாக அப் பகுதிகளைச் சுத்திகரித்து விவசாயிகள் கைகளில் ஒப்படைத்தாலேயே அவர்களால் விவசாயத்தில் ஈடுபட முடியும் என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

அந்தப் பகுதிகளில் ஏராளமான கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கும் சர்வாத்ரா அமைப்பின் நடவடிக்கை முகாமையாளர் மனிந்தர் சிங் கடந்த சில நாட்களில் மட்டும் 200 முதல் 300 வரையான கண்ணிவெடிகளை அகற்றியுள்ளோம் என்றார். அதே சமயம் சில சமயம் ஒரு நாளில் 10 முதல் 20 கண்ணிவெடிகளையே அகற்ற முடிகிறது எனவும் அவர் கூறினார்.

அர்ஜுன் எனப்படும் சிறப்பு இயந்திரம் ஒன்றை நாம் பயன்படுத்தி வருகின்றோம் . இந்த இயந்திரம் எந்த வகையான கண்ணிவெடிகளையும் அகற்றும் வல்லமை படைத்தது. தற்போது அத்தகைய 8 இயந்திரங்கள் நடவடிக்கையில் ஈடுபடுத் தப்பட்டுள்ளன.

நாம் கண்ணிவெடிகளை அகற்றி வரும் பகுதியில் மண் கடினமானதாகவும் வறண்டதாகவும் காணப்படுகின்றது. அதனால் சிறப்பாக வேதியல் சேர்க்கப்பட்ட தண்ணீரை தரையின் மீது தண்ணீர் தாங்கி வாகனங்கள் மூலம் பீச்சியடித்து அது ஊறுவதற்கு மூன்று மணி நேரம் காத்திருக்க வேண்டியிருக்கிறது. அதன் பின்னர் கண்ணி வெடிகளை இலகுவாக அகற்ற முடிகிறது என்றார் மனிந்தர் சிங்.

கண்ணிவெடிகளை அகற்றியதுடன் மட்டுமல்லாது சுத்திகரிக்கப்பட்ட கிராமங்களில் கண்காணிப்பு நடவடிக்கைகளிலும் தமது அமைப்பு ஈடுபட்டு வருகின்றது என அவர் தெரிவித்தார்.

ஏனெனில் சில பகுதிகளில் கண்ணி வெடிகள் எங்கு புதைக்கப்பட்டுள்ளன என்ற வழி காட்டல் வரைபடங்கள் ஏதுமற்ற வகையில் அங்கும் இங்குமாக கண்ட கண்ட இடங்களில் எல்லாம் அவை புதைக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (ஓ-6)

## மன்னாரில் அபிவிருத்திப் பணிகள் மக்களிடம் கையளிப்பு

(கொழும்பு)

மன்னார் மாவட்டத்தின் பல அபிவிருத்திப் பணிகளை மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது.

வங்காலை பாடசாலை விஞ்ஞான ஆய்வு கூடத்துடன் கூடிய இருமாடிக் கட்டிடம் திறந்து வைத்தல், தாழ்வுபாடு பாடசாலை கட்டிடம். நூலகப் பிரிவு திறந்து வைத்தல், நானாட்டான் அச்சன்குளம் கிராமத்துக்கான மின் விநியோகத்திட்டம் போன்றவை தொடர்பான நிகழ்வுகள் நேற்று முன்தினம் இடம்பெற்றன.

மீள்குடியேற்ற அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் றிசாத் பதியுதீன், மன்னார் அரசாங்க அதிபர் நீக்கலா பிள்ளை, கல்விப் பணிப்பாளர் ஆர்பல் ரெவல், பிரதேச செயலாளர்கள், பாடசாலை அதிபர்கள், பொது மக்கள் ஆகியோர் இந்நிகழ்வுகளில் கலந்து கொண்டனர். (ஓ-6)

# வவுனியா முகாம்களில் உள்ள சிறுவர்கள் பல்வேறு துன்பங்களுக்கு உட்பட்டுள்ளனர்

## அவுஸ்திரேலிய தொண்டு நிறுவனம் தெரிவிப்பு

(கொழும்பு)

வவுனியா முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறுவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருவதாக CHILD FUND என்ற அவுஸ்திரேலிய தன்னார்வ நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த சிறுவர்களுக்காக சர்வதேச நிதியீட்டலை கோரியுள்ள அந்த நிறுவனம் குடும்பங்களில் இருந்து பிரிந்துள்ள சிறுவர்கள் பாலியல் துன்புறுத்தல்கள், போசாக்கின்மை, நோய்கள், கடத்தல்கள் மற்றும் விற்பனை செய்யப்படுதல் போன்ற அச்சங்களுக்கு உள்ளாகியுள்ளதாக தெரிவித்துள்ளது.

தாம் கோரியுள்ள நிதிகளின் மூலம் குறைந்தது மூவாயிரம் சிறுவர்களுக்காவது உதவ முடியும் என அந்த நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

ஏற்கனவே யுத்தத்தின் போது தமது வீடுகள் இடிக்கப்பட்டும் தமது குடும்பத்தினர் கொல்லப்பட்டதிற்கும் சாட்சியாக உள்ள இந்த சிறுவர்கள் தற்போது நீர், உணவு மற்றும் கல்வி போன்றவற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளதாகCHILD FUND இன் மேலதிகாரி நீகல் ஸ்பென்ஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் உள்ள முகாம்களில் சேவையாற்றுவதற்கு CHILD FUND நிறுவனத்திற்கும் இடம் கிடைத்துள்ளது.

இந்த நிலையில் இந்த நிறுவனம் உள்ளூர் பணியாளர்களைக் கொண்டு தமது சேவைகளை மேற்கொண்டு வருகிறது. (ஓ-6)

# இலங்கையில் முறையற்ற நிர்வாகமே காணப்படுகிறது

## ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை பொது நிர்வாகத்தின் முறையற்ற நடவடிக்கைகள் வறுமையை ஒழிக்கும் திட்டத்திற்கு பாதிப்பை ஏற்படுத்துவதாக ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவித்துள்ளது. அரசியல் செல்வாக்கும் இதற்கொரு காரணமென அது குறிப்பிட்டுள்ளது.

இலங்கையின் பொதுநிர்வாக பிரிவில் 1.1.மில்லியன் பணியாளர்கள் சேவையாற்றுகின்றனர். இந்த நிலையில் பொறுப்புக்கள் மற்றும் கணக்கீடுகள் இன்மையென்பன உயர்ந்த நிலையில் காணப்படுவதாக ஆசிய அபிவிருத்தி வங்கி குறிப்பிட்டுள்ளது.

இலங்கையில் தற்போது 56 அமைச்சுக்கள் தேவையற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன. கிராமிய மட்டப் பாடசாலைகளில் ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுகின்ற போதிலும் அரசியல் செல்வாக்கு காரணமாக பலரும் அங்கு செல்வதிலிருந்து தம்மை தவிர்த்துக் கொள்கிறார்கள் என ஆசிய அபிவிருத்தி வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

இதன்காரணமாக சமுர்த்தி போன்ற திட்டங்கள் தமது இலக்கில் இருந்து தவறுவதாகவும் அந்த வங்கி குறிப்பிட்டுள்ளது. (ஓ-6)

# வவுனியா அரச விடுதிகள் மீது கல் வீச்சு பொலிஸார் தீவிர நடவடிக்கை

(கொழும்பு)

வவுனியா உள் சுற்று வீதியில் அமைந்துள்ள அரச. திணைக்கள அதிகாரிகளின் விடுதிகள் மீது இரவு நேரத்தில் கல் வீச்சு நடத்தியவர்களை கைது செய்வதற்குப் பொலிஸார் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

நேற்று முன்தினம் புதன் கிழமை இரவு 11.16 மணியளவில் இந்த கல் வீச்சுச் சம்பவம் இடம் பெற்றுள்ளதாக வவுனியா பொலிஸாரிடம் முறையிடப்பட்டிருக்கின்றது.

வவுனியா மாவட்டத்தின் அரச உத்தியோகத்தர்கள் தங்குவதற்கான அரச விடுதிகள் அமைந்துள்ள உள் சுற்று வீதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சர்வதேச தொண்டு நிறுவனத்தின் பெயர்ப் பலகை , கச்சேரி, நீதிமன்றம் உட்பட அரச திணைக்கள அதிகாரிகள் வசிக்கும் வீடுகளை இலக்கு வைத்தே இந்த கல்வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாக வவுனியா பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

சம்பவம் பற்றி கேள்விப்பட்டதும் சில நிமிடங்களிலேயே அவ்விடத்திற்குச் சென்ற பொலிஸார் அந்தப் பகுதியைச் சுற்றி வளைத்து தேடுதல் நடத்தினர்.

எனினும் கல்வீச்சு நடத் தியவர்கள் அங்கிருந்து தப்பி ஓடி விட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்து மேலிடத்தின் உத்தரவுக்கமைய வவுனியா பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஓ-6)


# தென்மாகாண சபை தேர்தல் நடவடிக்கைகளுக்கு பிரதமர் தலைமையில் குழு

(கொழும்பு)

தென்மாகாண சபை தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக ஐ.ம.சு. முன்னணி சார்பில் பிரதமர் ரத்ணசிறி விக்ரமநாயக்க தலைமையிலான குழுவொன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டுள் ளது.

இக் குழுவில் அமைச்சர்களான மைத்திரிபால சிறிசேன, நிமல் சிறிபால டி சில்வா, சுசில் பிரேம்ஜயந்த, டலஸ் அழகப்பெரும, தினேஷ் குணவர்த்தன, டியூ குணசேகர, சம்பிக்க ரணவக்க பாராளுமன்ற உறுப்பினர்களான பசில் ராஜபக்ஷ, விமல் வீரவன்ச மற்றும் சட்டத்தரணிகளான டபிள்யூ ஜீ. கருணா ஜீவ , சுமித் விஜேசிங்க ஆகி யோரும் உள்ளடங்குகின்றனர்.

இக்குழு தென் மாகாணத்திலுள்ள சகல தொகுதி அமைப்பாளர்கள் மற்றும் வேட்பாளர்களுக்கு தேர்தலை முன்னிட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள்தொடர்பாக ஆலோ சனைகளை வழங்கும் வேலைத் திட்டத்தை இந்த வாரம் ஆரம்பிக்கவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-6)







ஆணைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலையில் தும்பளை யோகசாந்தி நிலையத்தினர் நடத்திய யோகாசனக் கண்காட்சியை படங்களில் காணலாம். (படங்கள்:அம்பிக்குமரன்)

# பொதுமக்கள் கொல்லப்பட்டமை தொடர்பில் சர்வதேச விசாரணைகள் அவசியம்

## சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கை படையினரால் கைது செய்யப்பட்டவர்கள் சுட்டுக் கொல்லப்படுவதாக வெளியாகியுள்ள வீடியோ காட்சிகள் தொடர்பில் சர்வதேச விசாரணைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும என மனித உரிமைகள் கண்காணிப்பகம் கோரியுள்ளது.

யுத்தத்தின் போது இரண்டு தரப்பும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டன என்ற குற்றச்சாட்டையும் சுமத்தியுள்ளது.

இந்த வீடியோ 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இலங்கை படைவீரர் ஒருவரால் தமது கையடக்கத் தொலைபேசி மூலம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்த வீடியோவில் கண்கள் கட்டப்பட்ட நிலையில் இளைஞர்கள் அழைத்து வரப்பட்டு இலங்கை படையினரால் சுட்டுக்கொல்லப்படும் காட்சிகள் காணப்பிக்கப்பட்டுள்ளன.

இது 1949 ஆம் அண்டு ஜெனிவா உடன்படிக்கையின் சரத்து மூன்றில் கூறப்பட்டுள்ள கைதிகள் தொடர்பான நியதிகளை மீறும் செயலென மனித உரிமைகள் கண்காணிப்பகம் குற்றம் சாட்டியுள்ளது.

இலங்கையின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த யுத்தம் புலிகளுக்கு எதிரானதென கூறும் நிலையில் இந்த வீடியோ படம் மாறுபட்ட விதத்தில் அமைந்துள்ளதாக மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஐக்கிய நாடுகளின் பணிப்பாளர் ஸ்டீவ்கிரே சோவ் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் ஐக்கிய நாடுகள் சபை சுயாதீன சர்வதேச ஆணைகுழுவொன்றை அமைத்து இதனை விசாரணை செய்ய வேண்டும் என கோரியுள்ளார். (ஓ-6)

# காட்டுயானை தாக்கி வயோதிபர் மரணம்

(கொழும்பு)

மட்டக்களப்பு பெரிய போர தீவுப் பிரதேசத்தில் யானை தாக்கி ஒருவர் பலியாகியுள்ளார்.

மரணமானவர் 75 வயதுடைய வைரமுத்து நாராயணப் பிள்ளையென அடையாளம் காணப்பட்டுள்ளது.

வாகனம் திருத்தும் நிலையமொன்றில் காவலாளியாகக் கடமையாற்றிய இவர் இரவு 11.30 மணியளவில் காட்டு யானையின் தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளார்.

(ஓ-14)

# 11 மாதக் குழந்தையை விற்க முயன்ற தாய் உட்பட மூவர் கைது

(கொழும்பு)

11 மாதக் குழந்தையொன்றை 50 ஆயிரம் ரூபாவுக்கு விற்க முயற்சித்த தாய் உட்பட 3 பேர் கல்கிசை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ்மா அதிபருமான நிமல் மெதிவக தெரிவித்தார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட மூவரையும் எதிர்வரும் 6 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க கல்கிசை நீதிவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் பிற்பகல் உத்தரவு பிறப்பித்தது என்றும் அவர் கூறினார். இது தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறியதாவது,

குழந்தையை விற்பனை செய்ய முயன்ற குழந்தையின் தாய் அக் குழந்தையை வாங்கிய இருவர் உட்பட மூவர் பொலிஸா ருக்கு கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றுக்கு அமைய கல்கிசைப் பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

இந்தக்குழந்தையை 50 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்வதற்கான அனைத்து ஏற்பாடுகளும் மேற்படி சந்தேக நபர்களால் மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையிலேயே அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரான குழந்தையின் தாய் ஏற்கனவே தனது குழந்தையின் போலியான பிறப்பு சான்றிதழ் தொடர்பில் சிறைவாசம் அனுபவித்தவர் எனவும், சிறையிலிருந்து வெளிவந்த பின்னரே அந்தக் குழந்தையை விற்க முனைந்ததாகவும் பொலிஸார் மேற்கொண்ட முதற்கட்ட விசாரணைகளின் போது தெரியவந்தது.

பொலிஸாரின் விசாரணைகளின் பின்னர் மேற்படி சந்தேக நபர்கள் மூவரும் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டதை அடுத்தே அவர்களை எதிர்வரும் 6 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கல்கிசை நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

அத்துடன் குழந்தையை சிறுவர் நன்னடத்தை பள்ளியில் வைத்து பராமரிக்குமாறும் கல்கிசை பொலிஸாருக்கு நீதிமன்றம் உத்தரவு வழங்கியது. (6)

# மகேஸ்வரன் எம்.பி.படுகொலை வழக்கு:

## தடயப் பொருட்களின் பகுப்பாய்வு அறிக்கை கிடைக்காமையால் ஒத்திவைப்பு

(கொழும்பு)

தடயப் பொருட்களின் பகுப்பாய்வு அறிக்கை கிடைக்காமையினால், மகேஸ்வரன் எம்.பி. படுகொலை வழக்கு ஒக்டோபர் மாதம் 16 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கொழும்பு - மேல் நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ஷ முன்னிலையில் நேற்று முன்தினம் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

விசாரணையின் போது ஆஜரான அரசு சட்டவாதி பி. குமாரரட்ணம், வழக்கின் தடயப் பொருட்கள் தொடர்பான பகுப்பாய்வு அறிக்கை அரசாங்க பகுப்பாய்வுத் திணைக்களத்தினால் இன்னமும் வழங்கப்படவில்லை.

அந்த அறிக்கையினை சமர்ப்பிப்பதற்கு ஒன்றரை மாத காலம் தேவையென கால அவகாசம் கோரப்பட்டுள்ளது. இதனால் வழக்கு விசாரணையினை ஒத்திவைக்க வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

இதனையடுத்து வழக்கு விசாரணையினை ஒக்டோபர் மாதம் 16 ஆம் திகதிக்கு நீதிபதி சுனில் ராஜபக்ஷ ஒத்தி வைத்தார். வழக்கு விசாரணையின் போது எதிரியின் சார்பில் சட்டத்தரணி க. ஜெயக்குமாரும் பாதிக்கப்பட்ட குடும்ப நலனை கவனிப்பதற்கென ஜனாதிபதி சட்டத்தரணி எம். எம். அமீனும் ஆஜராகியிருந்தனர்.

வழக்கு விசாரணையின் போது எதிரியான ஜோன்ஸ்டன் கொலின் வெலன்டைன் சிறைக் காவலர்களினால் மன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

விசாரணையில் சாட்சியமளிப்பதற்கு சாட்சிகளான செல்லத்துரை பரஞ்சோதிநாதன், நித்தியானந்தம் ஆகியோர் வந்திருந்த போதிலும் வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளமையினால் சாட்சியமளிக்கவில்லை.

நேற்று முன்தினம் சாட்சியமளித்த செல்லத்துரை பரஞ்சோதிநாதன் பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தில் மகேஸ்வரன் எம்.பி.யை நான் கண்டேன். அவருடன் பேசிவிட்டு நான் அங்கிருந்து வெளியே வந்தேன்.

பின்னர் ஆலயத்திற்குள் வெடிச் சத்தங்கள் கேட்டன. நான் அங்கு சென்று பார்த்த போது மகேஸ்வரன் எம்.பி. விழுந்து கிடந்தார். அவரை வைத்தியசாலைக்கு வாகன்த்தில் ஏற்றிக்கொண்டு சென்றோம் என்று கூறினார். (ஓ-6)

# காங்கிரஸில் சேர விஜய், பிரபுவுக்கு அழைப்பு;

## சோனியா முன்னிலையில் இணைப்பு விழா நடத்த ஏற்பாடு




(சென்னை)

தமிழக காங்கிரஸை பலப்படுத்தும் நடவடிக்கைகள் தீவிரமாகியுள்ளன. அகில இந்திய காங்கிரஸ் பொதுச் செயலாளர் ராகுல் காந்தி இதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார். அடுத்த மாதம் இரண்டாவது வாரத்தில் தமிழகத்தில் சுற்றுப் பயணம் செய்யவும் திட்டமிட்டுள்ளார்.

இந்த நிலையில் விஜய்யை டெல்லிக்கு அழைத்து ராகுல் காந்தி சந்தித்து பேசியது அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இருவரும் ஒரு மணி நேரம் பேசினர்.

ஏற்கனவே விஜய் மக்கள் இயக்கம் என்ற அமைப்பை தொடங்கி அரசியலில் ஈடுபடுவதற்கான வேலைகளில் இறங்கி இருக்கிறார். ஒவ்வொரு மாவட்டமாக சென்று ரசிகர்களின் ஆலோசனை கூட்டங்களையும் நடத்தி பேசி வருகிறார். தனி கட்சி துவங்குவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.



கட்சி பெயர், கொடி, சின்னம் போன்றவை பற்றி நெருக்கமானவர்களுடன் ஆலோசித்து வருவதாகவும் கூறப்பட்டது. ஆனால் தற்போது ராகுலை சந்தித்தன் மூலம் தனி கட்சி முடிவை கைவிட்டு விட்டதாகவும் காங்கிரஸில் இணைய திட்டமிட்டு இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன. காங்கிரஸில் சேரும் பட்சத்தில் விஜய்க்கு என்ன பதவி அளிப்பது என்பது பற்றி ராகுல் இச் சந்திப்பில் விவாதித்தாக கூறப்படுகிறது. கட்சியில் முக்கிய பதவியை அவருக்கு வழங்க ராகுல் முடிபு செய்துள்ளதாக டெல்லி காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதுபோல் நடிகர் பிரபுவும் காங்கிரஸில் சேர திட்டமிட்டுள்ளார். அவர் விரைவில் அரசியலுக்கு வருவார் என பிரபுவின் அண்ணன் ராம்குமார் கூட்டங்களில் பேசி வந்தார். எந்த கட்சியில் சேருவார் என்பதை வெளிப்படுத்தவில்லை. பிரபு தந்தை சிவாஜிகணேசன் காங்கிரசில் தீவிர பற்று கொண்டவர்.

எனவே பிரபு காங்கிரஸ் பாரம்பரியத்தில் இருந்து விலகமாட்டார் என்று அவருக்கு நெருக்கமானவர்கள் தெரிவித்தனர். காங்கிரஸ் தரப்பில் இருந்து அவருக்கு தொடர்ந்து அழைப்புகள் சென்ற வண்ணம் உள்ளன. விஜய்யுடன் பிரபுவையும் காங்கிரசில் இணைத்து விடும் ஏற்பாடுகள் தற்போது தீவிரமாகியுள்ளன. சென்னையில் இதற்கென பிரத்யேக இணைப்பு விழா நடத்தவும் திட்டமிட்டுள்ளனர். அந்த விழாவில் சோனியாவும், ராகுல் காந்தியும் பங்கேற்க சம்மதம் தெரிவித்து உள்ளார்களாம். அவர்கள் முன்னிலையில் இருவரும் காங்கிரசில் சேருகிறார்கள்.

இதுகுறித்து தங்கபாலுவிடம் நிருபர்கள் கேட்டதற்கு அவர் கூறியதாவது, ராகுல் காந்தி இளைஞர் காங்கிரசை பலப்படுத்த தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறார். தற்போது மிகப்பெரிய தலைவராக வளர்ந்து வரும் அவர் எதிர்காலத்திலும் நாட்டை தலைமை ஏற்று நடத்தும் தலைவராக விளங்குவார். காங்கிரசின் கொள்கையை ஏற்று கட்சியில் விஜய் உட்பட யார் இணைந்தாலும் அவர்கள் அனைவரையும் முழுமனதோடு வாழ்த்தி வரவேற்கிறோம் இவ்வாறு அவர் கூறினார். (ஓ-6)

# இரத்த அழுத்தம் இருந்தால் ஞாபக மறதி அதிகரிக்கும்

## புதிய ஆய்வு தகவல்

(நியுயோர்க்)

உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்களுக்கு உடலில் ஏற்படும் பாதிப்பு தொடர்பாக அமெரிக்காவில் விஞ்ஞானிகள் ஆய்வு நடத்தினார்கள். உயர் இரத்த அழுத்தம் உள்ள 20 ஆயிரம் பேரிடம் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அதில் இரத்த அழுத்தம் உள்ளவர்களுக்கு ஞாபக மறதி அதிகரிக்கும், சிந்திக்கும் ஆற்றல் குறையும் என்றும் தெரிய வந்தது.

இரத்த அழுத்தம் இருந்தால் மூளைக்கு செல்லும் இரத்தக் குழாயின் சுவர்கள் தடிமனாகி விடும். மேலும் வளைந்து கொடுக்கும் தன்மையையும் இழந்து விடும்.

இதனால் இந்த இரத்தக்குழாய் வழியாக சீராக இரத்தம் செல்லாது. எனவே மூளைக்கு போதுமான இரத்தம் செல்வது இல்லை.

இதன் மூலம் இரத்த செல்கள் பாதிக்கப்பட்டு ஞாபக மறதி, சிந்தனை திறன் பாதிப்பு போன்றவை ஏற்படுகின்றன என்று அந்த ஆய்வு தெரிவிக்கிறது.

(ஓ-30)

# தொலைக்கல்வியும், வியாபார முகாமைத்துவ மாணிக் கற்கைநெறியும்

## (Distance Education and Bachelor of Business Management (BBM))

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடமானது பட்டப்படிப்பை மேற்கொள்ள விரும்பும் மாணவர்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தை அளிக்கும் முகமாக முகாமைத்துவமாணிக் கற்கை நெறியை (Bachelor of Business Management) (BBM) ஆரம்பிக்கின்றது. இக் கற்கை நெறி ஒரு வெளிவாரி கற்கை நெறியாகும். நாட்டின் எப்பகுதியில் இருக்கும் அனைவரும் இவ்வாய்ப்பை பயன்படுத்தும் முகமாக திறந்த தொலை தூரக் கற்கை நெறியாக ஆரம்பிக்கப்படுகிறது. இது ஒரு இணைய வழிக் கற்கை (Online programme) நெறியாகும்.

இணைய வழி கற்கை என்பது (Online Distance Education or e-learning) இணைய வழி மூலம் கல்வியை வழங்கும் ஒரு முறையாகும். குறிப்பிட்ட இடத்தில் பௌதீக ரீதியாக சமூகம் அளிக்காத மாணவர்களுக்கு போதனா முறைமை வடிவமைப்பையும் தொழில் நுட் பத்தையும் (Technology and instructional systems design) உபயோகித்து கல்வியை வழங்கும் முறையாகும். நேருக்கு நேர் பாட நெறிகளை கற்பதற்கு மாறாக மாணவர்களும், ஆசிரியர்களும் தாம் தெரிவு செய்த நேரங்களில் மின்னியல் தொடர்பு சாதனங்களின் ஊடாகவும், அவர்கள் தொடர்பு கொள்வதற்கு அனுமதிக்கப்பட்ட தொழில் நுட்பத்தின் ஊடாகவும், இணைய வழியினூடாகவும், தொடர்பு கொண்டு கல்வியை மேற்கொள்ளும் செய்முறையாகும்.

இத்தகைய தொலைக்கல்வியானது மாணவர்கள் தம் திறனை விருத்தி செய்யவும், தமது குழு ரீதியான ஆற்றலை கட்டியெழுப்பவும், தொழிலில் முன்னேறவும் உதவ முடியும். மேலும், உடனடி வேலைவாய்ப் பிற்கான சந்தர்ப்பங்களை பெற்றுக்கொள்வதற்கு இத்தகைய அங்கீகாரம் அளிக்கப்பட்ட தரமான உறுதிப்படுத்தப்பட்ட மூன்றாம் நிலைக் கல்வி பட்டப்படிப்பு / டிப்ளோமா சான்றிதழ்களைப் பெறுவதற்கான ஒரு சந்தர்ப்பம் இது என்பது கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

ஏனெனில், இந்த கற்கை நெறி இலங்கையில் சகல பாகங்களிலும் வெவ்வேறு நிறுவனங்களிலும், வெவ்வேறு பிரிவுகளில் உயர் கல்வி அமைச்சின் தொலைக்கல்வி நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் தேசிய இணைய வழித் தொலைக்கல்விச் சேவையின் அனுசரணையுடன் நடத்தப்பட்டு வருகிறது. இலங்கையின் பல பாகங்களிலும் சகல இன மாணவர்களிடையேயும் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முதன் முதலாக தமிழ்மொழி மூலம் ஆரம்பிக்கப்படுவது எமது தமிழ் மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். யாழ்ப்பாணப் பல் கலைக் கழகத்தில் முதன் முதலாக இக் கற்கை நெறி ஆரம்பிக்கப்படுவதனால் மாணவர்களுக்கு இது தொடர்பான விழிப்புணர்வு அவசியமாகின்றது.

எனவே தான் இக் கற்கை நெறி தொடர்பான கட்டுரைகள் காலத்திற்கு காலம் பத்திரிகைகளில் வெளி வந்த வண்ணம் உள்ளன. அத்துடன் யாழ் .பல்கலைக்கழக இணையத்தளத்தில் www. jfn.ac.lk இக் கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

இணையவழிக் கற்கை நெறியில் உபயோகிக்கப்படும் தொழில்நுட்பங்கள்.

தொலைக்கல்வியில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பங்கள் இரு வகையாகப் பாகு படுத்தப்படுகின்றன. அவையாவன,

- சம காலத்தில் இடம்பெறும் கற்றலுக் கான தொழில்நுட்பங்கள் (synchronous technologies)
- வேறுபட்ட நேரத்தில் இடம்பெறும் கற்றலுக்கான தொழில்நுட்பங்கள் (Asynchronous technologies)

**சமகாலத்தில் இடம்பெறும் கற்றலுக் கான தொழில்நுட்பங்கள் (Synchronous Technologies)**

சமகாலத்தில் இடம்பெறும் கற்றலுக் கான தொழில்நுட்பம் என்பது எல்லாப் பங்கேற்பாளர்களும் ஒரேநேரத்தில் இணைய வழியில் தொடர்பு கொள்ளும் இடத்தில் இணைய வழி மூலம் கல்வியை வழங்கும் வழிமுறையாகும். இது ஒரு நேர அட்டவணை மூலம் ஒழுங்குபடுத்தப்படும். இத் தொழில்நுட்பங்களாக தொலைபேசி(Tele phone), ஒளிப்பதிவு ஆலோசனைக் கூட்டம் (Video Conferencing), வலைப் பின்னல் ஆலோசனைக்கூட்டம் (web conferencing) என்பவற்றைக் குறிப்பிடலாம்.

**வேறுபட்ட நேரத்தில் இடம்பெறும் கற்றலுக்கான தொழில்நுட்பங்கள் (Asynchronous Technologies)**

வேறுபட்ட நேரத்தில் இடம்பெறும் கற்றலுக்கான தொழில்நுட்பம் எனப்படுவது பங்கேற்பாளர்கள் தமது பாட அலகுகளை தாம் விரும்பிய நேர அட்டவணைப் பிரகாரம் அணுகுவதற்கு முன் வருகின்ற ஒரு விநியோக வழி முறையாகும். எல்லா மாணவர்களும் ஒரே நேரத்தில் ஒன்றாக இருக்க வேண்டிய தேவையில்லை. இவற்றுக்கு உதாரணமாக

- ஒலிப்பதிவு நாடா -Audio cassette
- மின்னஞ்சல் E-mail



- குழுவிவாதங்கள்-Message Board Forums
- அச்சடித்த பாடக்குறிப்புகள் Print Materials
- ஒலி அஞ்சல்/தொலைநகல் Voice Mail/fax
- ஒளிப்பதிவு நாடா Video cassette

> **இதுதொடர்பான மேலதிக விபரங்களை பெற விரும்புவோர் இணைப்பாளர், திருமதி ரதிராணி யோகேந்திரராஜா 021 222 1106 அல்லது 0774021955 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ள முடியும்.**

கற்றல் முகாமைத்துவ முறைமை அல்லது கற்றல் முகாமைத்துவ உள்ளடக்க முறைமையும் (Learning Management Systems or Learning Management Content Systems (LMS)) மேற்குறிப்பிட்ட இரு கற்றல் தொழில்நுட்ப செயற்பாட்டிலும் உபயோகிக்கப்பட முடியும். (LMS) என்பது ஒரு கற்றல் கருவியல்ல. கற்றல் வழி முறையை சிறப்பாக நிர்வகிப்பதற்கு ஒரு போதனாசிரியருக்கு உதவுகின்ற ஒரு வடிவமைப்பாகும்.

**தொலைக்கல்வி பாட நெறிகளின் வகைகள்**

- அஞ்சல் மூலம் நடத்தப்படுகின்ற தொலைக்கல்வி
- சம காலத்திலோ அல்லது வேறு பட்ட நேரத்திலோ நடாத்தப்படுகின்ற இணைய வழி கல்வி
- வானொலி மூலம் அல்லது தொலைக் காட்சி மூலமான கல்விச் செயற் பாடு
- இறு வட்டில் பதிவு செய்து மாணவர்களுக்கு அளித்தல்
- கணனி மற்றும் கையடக்கத் தொலை பேசி பயன்படுத்துவதன் மூலமான இணைய வழி பாடக்குறிப்புகள் (கற்றல் முகாமைத்துவ முறைமை- LMS மூலமான கல்விச் செயற்பாடு)
- தொலைக்கல்வி முறையில் மாணவர்களை நேரடியாக அல்லது குழுக்களாக ஒழுங்கமைத்து கற்பித்தல் செயற்பாட்டை மேற்கொள்ளல்.

முகாமைத்துவமாணி பட்டப்படிப்புக்கான தொலைக்கல்வி மூலமான இக் கற்கை நெறி நவீன தொழில் நுட்ப வளர்ச்சிக்கேற்ப Online மூலமான கற்றல் முறைமையை அடிப்படையாகக்கொண்டது. Online முறைமையை முக்கியமாகக் கொண்டமையால் ஒவ்வொரு பாட அலகினதும் பாடத் திட்டத்துக்குரிய சகல அலகுகளும் மாணவர்களுக்கு website ஊடாக வழங்கப்படும்.

மேலும் பயிற்சிப் பட்டறைகள், அறிவுறுத்தல்கள், கட்டுரைப் பரீட்சைகள் போன்றவையும் நடாத்தப்படும். Online மூலமான கற்கை நெறியாதலால் மாணவர்கள் தாம் விரும்பிய நேரங்களிலும் , ஓய்வுநேரங்களிலும் இக் கற்கைநெறியை பயில முடியும். அத்துடன் மாணவர்களும் , விரிவுரையாளர்களும் நேருக்கு நேர் சந்திக்கும் சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன. இதில் இணைந்து கொள்ளும் மாணவர்கள் அனைவரும் தமது சொந்த வழிகாட்டலின் அடிப்படையிலேயே கல்வியைத் தொடர்வர். பிரத்தியேக வகுப்புக்கள் அவசியமற்றவை. ஒவ்வொரு மாணவரும் தமக்கு பொருத்தமான வழி


**திருமதி ரதிராணி யோகேந்திரராஜா**


சிரேஷ்ட விரிவுரையாளர்,
இணைப்பாளர், வியாபார முகாமைத்துவ மாணிப் பட்டப்படிப்பு
முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.


முறையைத் தெரிவுசெய்ய முடியும். முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடம் ஒவ்வொரு மாணவனும் தமது கல்வியைப் பூரணமாக நிறைவு செய்வதற்குத் தேவையான வசதிகளை அளிக்கும் என உத்தரவாதம் அளிக்கின்றது. இக் கற்கை நெறியை நடத்தும் பொறுப்பினை முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம் ஏற்றுக்கொண்டுள்ளது. நிர்வாக ரீதியான விடயங்கள் வெளிவாரிப் பட்டப் படிப்புகள் அலகினால் கையாளப்படும். (தொடரும்)

# இலங்கையில் தொடரும் இன அழிப்பை தடுத்து நிறுத்துங்கள்

## இந்திய கம்யூனிஸ்ட் தேசிய செயலர் தெரிவிப்பு

(மதுரை)



இலங்கையில் தொடரும் இன அழிப்பைத் தடுத்து நிறுத்த மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியச் செயலர் டி.ராஜா வலியுறுத்தினார்.

மதுரையில் அகில இந்திய மாணவர் பெருமன்றத்தின் 13ஆவது மாநில மாநாட்டையொட்டி கடந்த புதன்கிழமை நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அவர் பேசியதாவது,

இலங்கையில் முகாம்களில் அடைத்து வைக்கப் பட்டுள்ள 3 இல்ட்சம் தமிழர்கள் கடும் சித்திரவதைக்கு ஆளாக்கப்படுகின்றனர். அங்கு இன அழிப்பை இலங்கை அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

இலங்கையில் முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள தமிழர்கள் உணவு, மருந்து, சுகாதார வசதிகள் இன்றி தவிக்கின்றனர்.

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண விரும்பாத ராஜபக்ஷ தலைமையிலான அரசு அங்கு இன அழிப்பைத் தொடர்ந்து நடத்தி வருகிறது. இலங்கைத் தமிழர் நல்வாழ்வுக்காக இந்திய அரசு ரூ.500 கோடி நிதியுதவி அளித்துள்ளது. ஆனால் அவை அவர்களுக்கு சென்று சேர்ந்ததா என்பது தெரியவில்லை.

இலங்கைத் தமிழர்கள் இன்னும் 180 நாட்களில் தங்கள் இருப்பிடங்களுக்குத் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்று ராஜபக்ஷ உறுதி அளித்துள்ளதாக பிரதமர் மன்மோகன் சிங் கூறுகிறார். ஆனால் அவர் சொல்லும் 180 நாள் எப்போது தொடங்குகிறது, எப்போது முடிகிறது என்று திட்டவட்டமாக அறிவிக்கப்படவில்லை என்றார். (ஓ-6)

# கத்தோலிக்க மதகுருமார் அறுவர் முகாம்களில் இருந்து விடுவிப்பு

(கொழும்பு)

இடம்பெயர்ந்த நிலையில் வவுனியா அகதி முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருந்த கத்தோலிக்க மதகுருமார் 6 பேர் நேற்று முன் தினம் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

முகாம்களில் இருந்து மதகுருமாரை விடுவிக்கும் நடவடிக்கையின் கீழ் 177 இந்து மத குருமாருடன், கத்தோலிக்க குருமாரும் மேலும் கத்தோலிக்கர் அல்லாத கிறிஸ்தவ மத போதகர்கள் இருவரும் இவ்வாறு விடுதலை செய்யப்பட்ட அதேவேளை, கத்தோலிக்க குருமார் அனைவரும் மன்னார் ஆயரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இதற்கான விஷேட நிகழ்வு நேற்று முன் தினம் புதன் கிழமை வன்னி இராணுவக் கட்டளைத் தலைமையகத்தில் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பஷில் ராஜபக்ஷ எம்.பி தலைமையில் இடம்பெற்றது. (ஓ-6)





ஹற்றன் நஷனல் வங்கியின் பருத்தித்துறைக் கிளை திறப்பு விழாவில் விருந்தினர்கள் மங்கல வாத்தியங்கள் சகிதம் அழைத்து வரப்படுவதையும், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் நிறைவேற்று அதிகாரியுமான இ.தியாகராஜா புதிய கிளையை நாடா வெட்டித் திறந்து வைப்பதையும், அருகில் கிளை முகாமையாளர் ரி.அருணன் நிற்பதையும், பிரதம விருந்தினர் மாணவியொருவருக்கு பரிசில் வழங்கிக் கௌரவிப்பதையும் படங்களில் காணலாம்.
(படங்கள்:- வடமராட்சி நிருபர்)

## இலங்கை வங்கிக்கு புதிய கட்டடம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை நவீன சந்தையில் இலங்கை வங்கிக்கு பல இலட்ச ரூபா செலவில் புதிய கட்டடம் நிறுவப்பட்டு வருகின்றது. பிரதான வீதிச் சந்தியில் முன்பு இயங்கி வந்த இலங்கை வங்கியின் ஊர்காவற்றுறைக் கிளை யுத்த அனர்த்தங்களால் வேலணை வங்களாவடிச் சந்தியில் இயங்கி வந்து தற்பொழுது உதவி அரச அதிபர் பணிமனையில் இயங்கி வருகின்றது குறிப்பிடத்தக்கது. (ஓ-72)

## அஞ்சலி அகத்திற்கு தையல் இயந்திரம் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச் சிரமத்தினால் அஞ்சலி அகத்திற்கு தையல் இயந்திரம் வழங்கும் நிகழ்வு நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு அஞ்சலி அகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தின் சார்பில் சேவாச்சிரம நிர்வாகிகளில் ஒருவரான பேராசிரியர் மா. நடராஜசுந்தரம் 2 தையல் இயந்திரங்களை அஞ்சலி அக அருட்தந்தை டேமினியிடம் கையளிக்கவுள்ளார். (ஓ-9)

## அடைக்கல அன்னையின் வருடாந்தப் பெருவிழா

(ஊர்காவற்றுறை)

யாழ்-ஆஸ்பத்திரி வீதி அருள்மிகு அடைக்கல அன்னையின் வருடாந்தப் பெருவிழா நாளை மறுநாள் ஞாயிற்றுக் கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இவ்விழா பங்குத்தந்தையும் புனித மரியாயின் சேனையின் ஆன்மீகத் தலைவருமான அருட்பணி றெஜி இராஜேஸ்வரன் அடிகள் தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆயத்த வழிபாடுகள் மாலை 5 மணிக்கு செபமாலையுடன் நடைபெறவுள்ளது.

7 ஆம் திகதி நற்கருணை வழிபாடும் மறுநாள் 8 ஆம் திகதி திருநாள் திருப்பலியும் மாலை 5 மணிக்கு திருச்சொரூப பவனியும் தொடர்ந்து அன்னையின் ஆசீருடன் திருவிழா நிறைவுபெறவுள்ளது. (ஓ-72)

## கட்டி வளர்க்காத கால்நடைகளால் பயிர்கள் நாசம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் ஆடு, மாடு போன்ற கட்டாக்காலி கால்நடைகளால் உப உணவும் பயிர்ச் செய்கையாளர் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். கால்நடைகள் வளர்ப்போர் தமது கால்கநடைகளை கட்டி வளர்க்காத காரணத்தால் அந்தக் கால் நடைகள் உப உணவுப் பயிர்களை நாசம் செய்து வருகின்றன. இதனால் பயிர்ச் செய்கையாளர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆதலால் கால்நடை வளர்ப்போர் அவற்றை கட்டி வளர்க்குமாறு விவசாயிகள் கோருகின்றனர். (ஓ-72)

## அகில இலங்கை இளங்கோ கழகத்தின் கவிஞர் இ.முருகையனின் நினைவு விழா

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை இளங்கோ கழகம் நடத்தும் ''சாகித்திய ரத்னா'', ''கலாநிதி'', கவிஞர் இ.முருகையன் நினைவு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு புலோலி, புற்றளை மகா வித்தியாலய சின்னத்தம்பி மண்டபத்தில் கழக அமைப்பாளர் பரா.ரதீஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட விவாசய பெரும்பாக உத்தியோகத்தர் ச.உருத்திரேஸ்வரன் ஆரம்ப உரையாற்றவுள்ளார். தொடர்ந்து நினைவுரைகளை ''ஈழத்து தமிழ் நாடக வரலாற்றின் முருகையன்'' என்னும் தலைப்பில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி ஆசிரியர் த.மார்க்கண்டு ''முருகையனின் கவிதைகள் ஒரு நோக்கு'' எனும் பொருளில் ''தாயகம்'' ஆசிரியர் க.தணிகாசலம், ''மொழிபெயர்ப்பும் முருகையனும்'' என்னும் கருத்தில் ஓய்வு பெற்ற ஆசிரியர் ஆ.கந்தையா, ''முருகையன் என்றொரு மானிடன்'' என்னும் விடயம் பற்றி வல்வெட்டி மக்கள் வங்கி முகாமையாளர் கவிஞர் பி.கிருஸ்ணானந்தன் மற்றும் ''எனது பார்வையில் முருகையன்'' என்னும் தலைப்புப் பற்றி புற்றளை மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க தலைவர் க.கதிர்காமநாதன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

அத்துடன் வே.குமாரசாமி தலைமையில் ''முருகையனின் அடிதொட்டு'' என்னும் தலைப்பில் வேல்நந்தகுமார், பெரிய ஜங்கரன், சிவ.முகுந்தன், பரா.ரமேஸ், க.வாணி முகுந்தன், தி.கார்த்திகேயன் ஆகியோர் பங்குபற்றும் கவியரங்கமும் இடம்பெறவுள்ளது.(ஓ-9)

## முதியோர்களுக்கான அடையாள அட்டை

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் முதியோர்களுக்கான அடையாள அட்டைகள் இதுவரையில் மூவாயிரத்துக்கு மேற்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முதியோர் அடையாள அட்டைகள் பெற விரும்புவோர் தங்கள் பகுதி கிராமசேவையாளரிடம் விண்ணப்பங்களைப் பெற்று விண்ணப்பிக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(6-134)

## கொமிசியக் கூட்டம்

(ஊர்காவற்றுறை)

யாழ்.மறை மாவட்ட புனித -மரியாயின் சேனையின் மாதாந்தக் கொமிசியக் கூட்டம் எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு மறைக்கல்வி மகாநாட்டு மண்டபத்தில் ஆன்மீகத் தலைவர் அருட்பணி றெஜி இராஜேஸ்வரன் அடிகள் தலைமையில் நடைபெறவுள்ள்ளது. (6-72)

## திறப்பு விழா

காரைநகர் வியாவில் ஐயனார் தேவஸ்தானத்தில் கணபதீஸ்வரக் குருக்கள் நூலகம் மற்றும் கணனிப் பயிற்சி நிலையம் ஆகியனவற்றின் திறப்பு விழா நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 11.15 மணிக்கு ஆலய அறங்காவலர் க.சோமசேகரம் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஓ-9)

## சமுர்த்தி வங்கியினரின் பயனாளிகளுக்கான உதவிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர் கிழக்கு சமுர்த்தி வங்கியினரால் கமநெகும திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட(J/65, J/70, J/74) ஆகிய கிராம அலுவலர் பிரிவிலுள்ள 52 சமுர்த்திப் பயனாளிகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

சமுர்த்திப் பயனாளிகளின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் முகமாக மீன்பிடி உபகரணங்கள், கோழி வளர்ப்பதற்குரிய நிதி உதவிகள் மற்றும் தளபாடங்கள் போன்ற உதவிகள் வழங்கப்பட்டுள்ளதாக சமுர்த்தி வங்கியினர் தெரிவித்துள்ளனர். (ஓ-30)

## புதிய முன்பள்ளி அமைக்கப்படவுள்ளது

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலகத்தினரால் கரித்தாஸ் - கியூடெக் நிறுவனத்தின் அனுசரணையுடன் J/114, திருநெல்வேலி மத்திய வடக்கு பாற்பண்ணையில் முன்பள்ளி ஒன்றை அமைப்பதற்கான பூர்வாங்க வேலைகள் நடைபெற்று வருவதாக நல்லூர் பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன் தெரிவித்துள்ளார். (ஓ-36)

## நோயாளர்களுக்கான இலவச உணவுப் பொருள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலக பிரிவில் புற்றுநோய், காசநோய் மற்றும் தொழுநோய் போன்றவற்றால் பீடிக்கப்பட்டு ஏற்கனவே கொடுப்பனவுகளைப் பெறும் பயனாளிகள் 90 பேருக்கு இலவச உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றது.

கடந்த 17 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் வழங்கப்பட்ட பொருட்களை பெற்றுக்கொள்ளத் தவறிய 25 பேர் எதிர்வரும் 31 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நல்லூர் பிரதேச செயலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ஓ-30)

## அதிபர்களுக்கான அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை அதிபர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை மறுநாள் ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு வலயக் கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இக் கலந்துரையாடலில் அதிபர்கள் அனைவரும் தவறாது சமுகமளிக்குமாறும் வரும் பொழுது கணக்காளரால் அனுப்பப்பட்ட மாதிரிப் படிவத்தில் தர உள்ளீடு, ESDFP உட்பட கணக்கு வரவு செலவு விபரங்களைக் கொண்டு வருமாறும் கேட்கப்பட்டுள்ளனர். (ஓ

## நூல்வெளியீடும் ஆன்மீகச் சொற்பொழிவும்

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத் திருவிழாவை முன்னிட்டு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் உற்சவகால விசேட நிகழ்வுகளில் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு ''ஞானச்சுடர்'' மாதாந்த இதழ் வெளியீடு இடம்பெறவுள்ளது.

வெளியீட்டுரையை தொண்டைமானாறு வீரகத்திப் பிள்ளை மகாவித்தியாலய ஆசிரியர் இரா. ஸ்ரீநடராசாவும் தொடர்ந்து மதிப்பீட்டுரையை க.நடேசு (தெணியான்) ஆகியோர் வழங்கவுள்ளனர்.

அத்துடன் நாளை சனிக்கிழமை 10 மணிக்கு ''இந்துசமயம் காட்டும் ஆன்மீகம்'' என்னும் விடயம் பற்றி மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன் சொற்பொழிவாற்றவுள்ளார். (ஓ-9-35)

## வீதி விளக்குகள் ஒளிராததால் ஊர்காவற்றுறை இருளில்

(ஊர்காவற்றுறை)

இலங்கை மின்சார சபை வேலணைப் பிரிவினரால் தீவுப் பகுதிக்கு 24 மணிநேர மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது.

ஆனால் ஊர்காவற்றுறைப்பகுதியில் சில இடங்களில் வீதி விளக்குகள் எரியாமல் உள்ளமை மிகுந்த கவலைக்குரிய விடயமாகும் எனவும் பிரதானசந்தி, கோப்சிற்றிச் சந்தி ஆகியவற்றிலுள்ள வீதி விளக்குகள் எரியாததால் இரவு நேரங்களில் ஊர்காவற்றுறைப் பிரதேசம் இருளில் மூழ்கி கிடப்பதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (ஓ-72)

# யாழ்.செய்திகள்

## சமூக சேவைப் பணியில் அருட் சகோதரிகள்

(ஊர்காவற்றுறை)

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை திருக்குடும்ப கன்னியர்மட அருட்சகோதரிகள் ஆன்மீகப் பணிகளுடன், பொருளாதாரம் குறைந்த மக்களுக்கு உதவியளித்தல், வறுமைக்கோட்டிலுள்ள சிறுவர்களுக்கு கல்வியறிவூட்டுதல், முதியோர்களைப் பராமரித்தல் மற்றும் சமூகப் பணிகள் ஆகியவற்றில் ஈடுபட்டு வருகின்றனர். விளையாட்டு, உடற்பயிற்சி, முதலுதவி வழங்கல், ஆன்மீக வழிகாட்டல், நற்கருணை வழங்கல் ஆகியவற்றை செய்து வருவது பாராட்டத்தக்கது. (ஓ-72)

## பசுப்பால் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தால் மிருசுவில், கொடிகாமம் ஜி.ரி.எம்.எஸ் நலன்புரி நிலையத்தில் உள்ள சிறுவர்களுக்கு இன்று பசுப்பால் வழங்கப்படவுள்ளது.

தென்மராட்சிப் பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் தலைமையில் 325 சிறுவர்களுக்கு பசுப்பால் வழங்கப்படவுள்ளதாக சுவாமி சித்ரூபானந்தா தெரிவித்துள்ளார்.

இத் திட்டம் அனைத்து நலன்புரி நிலையங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ-9)

# ஆப்கானிஸ்தானில் குண்டு வெடிப்பு 41 பேர் பலி ; 60 பேர் காயம்

தென் ஆப்கானிஸ்தான் நகரான கண்டஹாரில் இடம்பெற்ற பாரிய கார்க் குண்டு வெடிப்பில் குறைந்தது 41 பேர் பலியானதுடன் 60 பேருக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.



இந்தக்குண்டு வெடிப்பின் போது பல கட்டிடங்கள் இடிந்து விழுந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆப்கான் ஜனாதிபதித் தேர்தலின் முதல் உத்தியோகபூர்வ முடிவுகள் அறிவிக்கப்பட்டு சிறிது நேரத்திலேயே இந்தக் குண்டு வெடிப்பு இடம்பெற்றுள்ளது.

தலிபான் போராளிகள் பலம் பெற்றுத் திகழும் மேற்படி நகரில் இடம்பெற்ற இக்குண்டுத் தாக்குதலுக்கு இதுவரை எவரும் உரிமை கோரவில்லை.

பல கார்களில் குண்டுகள் பொருத்தப்பட்டு ஒரே சமயத்தில் வெடிக்க வைக்கப்பட்டதாக சில அறிக்கைகளும் டிரக் வண்டியொன்றிலோ அல்லது எண்ணெய் தாங்கி வண்டியிலோ குண்டுகள் பொருத்தப்பட்டிருந்து வெடிக்க வைக்கப்பட்டிருக்கலாம் என வேறு சில அறிக்கைகளும் தெரிவிக்கின்றன.


கண்டஹார் மாகாண சபை அலுவலகங்களுக்கு அருகிலேயே இந்தக் குண்டு வெடிப்பு இடம் பெற்றுள்ளது.

அத்துடன் கட்டிடமொன்றிலிருந்த திருமண மண்டபம் ஒன்றும் சேதமடைந்துள்ளது. ரம்ழான் நோன்பு அனுஷ்டிக்கப்படுகின்ற நிலையிலேயே இத்தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

தாக்குதலுக்கு முன் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 4 அமெரிக்கப் படையினர் உயிரிழந்துள்ளனர். (ஓ-6)

# மாரடைப்பால் ஏற்பட்ட காயங்களை ஒட்டுப்போட்டு குணப்படுத்தலாம்

## இஸ்ரேலிய விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு



மாரடைப்பின் போது இருதயத்தில் ஏற்படும் சேதங்களை பொருத்துவதற்கு முக்கிய வழியொன்றை இஸ்ரேலிய விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.

இதன் பிரகாரம் இருதய தசையினால் உருவாக்கப்பட்ட ஒட்ட வைக்கும் இழையங்களைப் பயன்படுத்தி மாரடைப்பால் ஏற்பட்ட காயங்களை ஒட்டுப் போட்டு குணப்படுத்த முடியும் என மேற்படி விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

ஆரம்ப கட்டமாக மாரடைப்புக்கு உள்ளாகிய எலிகளில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை வெற்றிகரமாக அமைந் ததாக இந்த ஆய்வுக்கு தலைமை தாங்கிய டீர் ஷெவா எனும் இடத்திலுள்ள பென் கூரியன் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டால் டவிர் தெரிவித்துள்ளார்.

இந்த ஒட்டும் முறையானது பாதிப்படைந்த இருதயத்தின் ஆரோக்கிய நிலையை சிறந்த முறையில் அபிவிருத்தி செய்வதாக அவர் கூறினார். (ஓ-6)

# கையடக்க தொலைபேசி குறும் செய்திகளை ஆதாரமாகக்கொண்டு பிரான்சில் விவாகரத்து

விவாகரத்து வழங்குவதற்கான சான்றாக கையடக்க தொலைபேசி மூலம் அனுப்பப்படும் குறும் செய்திகளையும் ஏற்றுக்கொள்ள முடியும் என பிரான்ஸ் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.



இதன் மூலம் ஒரு கணவன் அல்லது மனைவி தனது கள்ளக் காதலி அல்லது காதலனுக்கு அனுப்பும் குறுஞ் செய்திகளை சம்பந்தப்பட்டவர்கள் திருமணத்துக்கு அப்பாலான உறவைக் கொண்டிருப்பதற்கு ஆதாரமாக முன்வைத்து இலகுவாக விவாகரத்து பெறுவது சாத்தியமாகியுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு முன் தனது கணவனோ அன்றி மனைவியோ தவறான நடத்தையை கொண்டிருப்பதையோ அல்லது தம்மை தவறாக நடத்தியதையோ நிரூபிக்க முடியாத காரணத்தால் விவாகரத்து கோருபவர்கள் பல வருடங்கள் காத்திருக்க நேரிட்டது.

ஏற்கனவே கையடக்க தொலைபேசி குறும் செய்திகள், படுகொலை மற்றும் குற்றவியல் விசாரணைகளின் போது உத்தியோகபூர்வ ஆதாரங்களாக பிரான்ஸ் நீதிமன்றத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

இந்நிலையில் தற்போது மேற்படி உத்தியோகபூர்வ ஆதாரங்கள் குடும்ப வழக்கு விசாரணைகளுக்கும் விரிவுபடுத்தப்படவுள்ளன.

அத்துடன் இலத்திரனியல் அஞ்சல்களும் இந்த வழக்கு விசாரணைகளில் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன.

பிரான்ஸைப்பொறுத்தவரை விவாகரத்து பெறுகின்றமையானது நீண்ட காலத்தை எடுத்துக்கொள்ளும் மிகுந்த சிரமம் மிக்க செயற்கிரமமாக இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

# ஆபாச படங்களை காட்டி வைரசை பரவ செய்யும் இணையத்தளங்கள்

(மெல்போர்ன்)

கணனியில் வைரசை பரவச் செய்யும் 100 இணையத்தளங்களின் பட்டியலை அவுஸ்திரேலிய நிறுவனம் வெளியிட்டுள்ளது. கணனியில் இன்டர்நெட்டின் பயன்பாடு நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது .இதில் மால்வோர் என்ற மென்பொருள் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி சிலர் ஆபாசக் காட்சிகளை சில இணையத்தளங்களில் காட்டுகின்றனர்.


இந்த இணையத்தளங்களைப் பயன்படுத்தினால் கணனியில் வைரஸ் பரவி பல ஆயிரம் பயனுள்ள இணையத்தளங்களை பாதிப்படையச் செய்யும் அபாயம் உள்ளது. கடந்த ஆறு மாதங்களில் மால்வேர் மென்பொருள் மூலம் 20 ஆயிரத்துக்கும் அதிகமான இணையத்தளங்கள் பாதிப்படைந்துள்ளதாக அவுஸ்திரேலிய கணனி வைரஸ் தடுப்பு நிறுவனமான நார்டன் சிமென்டெக் தெரிவித்துள்ளது.

இது குறித்து நார்டன் சிமென்டெக் நிறுவன அதிகாரி நடாலி கானர் குறிப்பிடுகையில், மால்வேர் மென்பொருள் சில விளையாட்டு இணையத்தளங்கள் மூலமும் வைரசை பரவச் செய்கிறது.

இந்த வைரஸ் பரவுவதால் சிலருடைய தனிப்பட்ட அந்தரங்க தகவல்கள் மற்றவரின் கையில் எளிதாகக் கிடைக்கவும் வாய்ப்பு உள்ளது.

எனவே ஆபத்துக்குரிய 100 இணையத்தளங்களின் பெயர்களை வெளியிட்டுள்ளோம். இந்த இணையத்தளங்களைப் பயன்படுத்தாமல் இருப்பதன் மூலம் வைரஸ் பரவுதல் உள்ளிட்ட பாதிப்புக்களைத் தவிர்க்க முடியும் என்றார். (ஓ-6)

# 30 அடி நீளமான இராட்சத பாதணி



வடமணிலாவிலுள்ள கபான் நகரில் திஸினெலாஸ் (சிலிப்பர்கள்) திருவிழாவில் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்ட 30 அடி நீளமான இராட்சத பாதணியை படத்தில் காணலாம்.

கபான் நகரானது மணிலாவின் பாதணிகள் நகரமாக வர்ணிக்கப்படுகிறது. (ஓ-6)

# இலங்கை கடற்படையினரை கண்டித்து 5 மாவட்ட மீனவர்கள் உண்ணாவிரதம்

இலங்கை கடற்படை நடவடிக்கையை கண்டித்து காலவரையறையற்ற வேலை நிறுத்தம் செய்துள்ள ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்கள் இராமேஸ்வரத்தில் நேற்று முன்தினம் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர்.

பாக்குநீரிணை கடலில் மீன்பிடிக்க செல்லும் ராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகபட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்ட மீனவர்களை இலங்கை கடற்படையினர் தாக்கி மீன்பிடி சாதனங்களையும் சேதப்படுத்தியிருந்தனர்.

இலங்கை கடற்படையினரின் இந்த செயலை கண்டித்தும் பாக்கு நீரிணைப் பகுதியில் இருநாட்டு மீனவர்களும் மீன்பிடிக்கும் பாரம்பரிய உரிமையை பெற்றுத்தர மத்திய அரசு நடவடிக்கை எடுக்க கோரியும் புதன்கிழமையுடன் ஐந்தாவது நாளாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட படகுகள் கடலுக்கு செல்லாமல் கரையில் நிறுத்தப்பட்டுள்ளன. மீன்பிடி தொழில் சார்ந்த அனைத்து தொழில்களும் முடக்கப்பட்டுள்ள நிலையில் இதை சார்ந்த இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் தொழில் வாய்ப்புகளை இழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஐந்து மாவட்டங்களில் மீன் வரத்து இல்லாததால் அரசுக்கு பலகோடி ரூபாய் அன்னிய செலவாணி இழப்பு ஏற்பட்டுள்ளது. மீன் விலையும் பன்மடங்கு உயர்ந்துள்ளது.

இந்நிலையில் மீனவர்கள் நேற்று முன்தினம் இராமேஸ்வரத்தில் உண்ணாவிரதம் நடத்தினர். (ஓ-6)

# உடலில் குண்டு பாய்ந்த நிலையில் இராமேஸ்வரத்துக்கு தப்பி வந்த தமிழர்

(இராமேஸ்வரம்)

இலங்கை இராணுவத்தின் துப்பாக்கி குண்டு ஒன்று விலாவில் பாய்ந்த நிலையில் மருத்துவ சிகிச்சைக்காக ஈழத்தமிழர் ஒருவர் இராமேஸ்வரத்துக்கு கள்ளத் தோணியில் தப்பி வந்துள்ளார்.

இலங்கையில் முல்லைத்தீவு மாவட்டம் சுதந்திரபுரம் என்ற பகுதியில் வசித்து வந்தவர் ரஞ்சித் ஜெயகுமார். இவருக்கு சுகந்தினி என்ற மனைவியும், மதியின்பம், கனியின்பன் என்ற இரண்டு மகன்களும் உள்ளனர்.

இவர் போர் சமயத்தில் இலங்கை இராணுவத்தின் குண்டு மழைக்குப் பயந்து பதுங்கு குழியில் குடும்பத்துடன் வாழ்ந்து வந்தார். அப்போது ஒருநாள் இலங்கை இராணுவத்தின் துப்பாக்கியில் இருந்து வெளிவந்த ஒரு தோட்டா பதுங்குகுழியில் மறைந்திருந்த இவரது வலது விலாவில் பாய்ந்தது.

இந்நிலையில் கடந்த திங்கட்கிழமை அவர் சிகிச்சைக்காக தனது குடும்பத்தினருடன் இராமேஸ்வரம் வந்தார். தற்போது அவரிடம் இராமேஸ்வரம் பொலிஸார் விசாரணை செய்து வருகின்றனர்.

இராமேஸ்வரம் பொலிஸாரிடம் அவர் கூறுகையில், போர் சமயத்தில் சுதந்திரபுரம் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து முள்ளி வாய்க்கால் பகுதிக்குச் சென்றோம். இராணுவம் நடத்திய தாக்குதலில் பதுங்கு குழியில் தங்கியிருந்த எனது வலதுவிலாவில் துப்பாக்கிக் குண்டு பாய்ந்தது.

இதையடுத்து முல்லைத்தீவு அரச மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். ஆனால் துப்பாக்கி குண்டுகளை அகற்றமுடியாது என்று டாக்டர்கள் கூறிவிட்டனர்.

என்னால் வலியைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. எனவே, தமிழ்நாட்டுக்கு வந்து சிகிச்சைபெற முடிவு செய்தேன். இதையடுத்து வவுனியா முகாமுக்கு சென்ற அகதிகளோடு தங்கினோம். பின்பு ஒரு படகோட்டிக்கு ரூபா 2 இலட்சம் கொடுத்து இங்கு தப்பிவந்தோம் என்றார்.

அவரிடம் பொலிஸார் சோதனை செய்த போது இலங்கை, கனடா, அமெரிக்கா, ஐரோப்பா உட்பட பல வெளிநாட்டுப் பணமும், இந்தியப் பணம் ரூபா 25 ஆயிரமும் இருந்தது.

பின்னர் ரஞ்சித் ஜெயகுமாரை சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்பிவைத்த பொலிஸார் ஏனையோரை மண்டபம் அகதிகள் முகாமுக்கு அனுப்பிவைத்தனர். (ஓ-6)

நேர் வழியில் அடைய முடியாததை ஒருநாளும்
குறுகிய வழியில் அடைந்துவிட முடியாது.

- கதே

வலம்புரி

## 80 வீதத்தை 12 வீதம் எதிர்த்தால் 12 வீதத்தை 8 வீதம் ஏன் எதிர்க்கக்கூடாது?

மக்களிடையே நல்லுறவைப் பேண தமிழ்-முஸ்லிம் கட்சிகள் பாடுபடவேண்டும் என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் கேட்டுள்ளார்.

தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையே உரிமைப் போராட்டம் நடந்த போதெல்லாம் முஸ்லிம் கட்சிகள் சிங்கள அரசுகளுடன் சேர்ந்து தப்பித்துக் கொள்ளும் வழிவகைகளைக் கையாண்டனர்.

தமிழ் மக்களும்-சிங்கள மக்களும் போரில் ஈடுபட முஸ்லிம் இனம் தன்னை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பது அவர்களின் நினைப்பும்-செயலுமாக இருந்தது. இதில் அவர்கள் கணிசமான வெற்றியும் அடைந்தனர்.

சிறுபான்மை இனமான தமிழ் மக்களை இந்த நாட்டின் பெரும்பான்மை நசுக்கிய போதெல்லாம் முஸ்லிம் அரசியல் கட்சிகள் மெளனமாக இருந்தன.

யாழ்ப்பாணத்திலிருந்து தங்களை வெளியேற்றிய காழ்ப்புணர்வை மையமாக வைத்து அவர்களின் நடவடிக்கை அவ்வாறு இருந்தன என்பது ஏற்புடைய நியாயம் அல்ல.

ஏனெனில் யாழ்ப்பாணத்து முஸ்லிம் மக்களின் வெளியேற்றத்தை தமிழ் மக்கள் ஒரு போதும் அங்கீகரிக்கவில்லை. இந்த உண்மையை முஸ்லிம் மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இது தவிர சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்குள் பிளவு ஏற்பட்டபோது தன்னை முஸ்லிம்களின் தலைவராகக் காட்டிக் கொள்ள முற்பட்ட ரவூப் ஹக்கீம் விடுதலைப் புலிகளுடன் ஒப்பந்தமும் செய்தார். இவை எல்லாம் நடந்து முடிந்தபின் எண்பது வீதத்தை பன்னிரண்டு வீதம் எதிர்த்தால் பன்னிரண்டு வீதத்தை எட்டு வீதம் ஏன் எதிர்க்கக் கூடாது என ரவூப் ஹக்கீம் கேள்வி எழுப்பினார். அந்தக் கேள்வி அவரின் உள்ளார்ந்த மன நிலையை படம் பிடித்துக் காட்டுவதாக அமைந்திருந்தது.

இப்போது சிறுபான்மை இனத்தை பெரும்பான்மைக்குள் உள்வாங்கும் திட்டத்தை அரசு முன்னெடுத்துள்ள நிலையில் முஸ்லிம்கள் தங்களுக்கு ஏற்படக் கூடிய பேராபத்தை உணர்ந்துள்ளனர்.

இதன் காரணமாகவே ரவூப் ஹக்கீம் தமிழ்-முஸ்லிம் கட்சிகளினதும், அந்தந்த மக்களின் ஒற்றுமையையும் வலியுறுத்தியுள்ளார்.

இனம்-மதம்-மொழி ஆகியவற்றின் பெயர்களில் அரசியல் கட்சிகள் இருக்க முடியாதென்ற சட்டமூலம் அரங்கேறும் கட்டத்தில் ஹக்கீமுக்கு ஞானம் பிறந்து என்ன விமோசனம்.

எல்லாம் முடிந்துவிட்டது இருந்தும் ஹக்கீமுக்கு பிறந்த ஞானம் எங்கள் தமிழ் கட்சிகளுக்கு இறுதி வரை இல்லாமல் போனமை அதிர்ச்சிக்குரிய விடயமே.

# ஈழத்தமிழ் அகதிகளை அவர்களது வாழ்விடங்களுக்கு அனுப்ப வேண்டும்

## தமிழகமெங்கும் போராட்டங்கள்

(கொழும்பு)

தமிழகத்தை ஆக்கிரமிக்கும் வெளியாரை வெளியேற்ற வேண்டும். ஈழத்தமிழ் அகதிகளை வாழ்விடங்களுக்கு அனுப்ப வேண்டும் என்ற கோரிக்கைகளை முன் வைத்து தமிழகமெங்கும் நேற்று முன்தினம் புதன்கிழமை தமிழ்த்தேசிய எழுச்சி நாள் கடைப்பிடிக்கப்பட்டது.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் பேரணி ஆர்ப்பாட்டம் என போராட்டங்கள் நடந்தன. கடந்த ஜூலை மாதம் திருச்சியில் தமிழ்த்தேசப் பொதுவுடைமைக் கட்சி சார்பில் நடத்தப்பட்ட தமிழ்த்தேசியம் சிறப்பு மாநாட்டில் ஓகஸ்ட் 26ஆம் திகதியை தமிழ் நாட்டுத் தமிழர்கள் தமிழ்த்தேசிய எழுச்சி நாளாகக் கடைப்பிடிக்க வேண்டுமெனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

அதன்படி நேற்று முன்தினம் தமிழ்த்தேசிய எழுச்சி நாள் தமிழகமெங்கும் கடைப்பிடிக்கப்பட்டது.

தஞ்சையில் தமிழ்த்தேசப் பொதுவுடைமைக் கட்சி சார்பில் தமிழ்த் தேசிய எழுச்சி நாள் பேரணியும் ஆர்ப்பாட்டமும் நடைபெற்றது. த.தே. பொ.க. பொதுச் செயலாளர் தோழர் பெ.மணியரசன் உரையாற்றுகையில்,

தமிழ் நாட்டு உரிமைகளை மீட்க வேண்டியதின் அவசியம் குறித்தும் முள்வேலிகளுக்குள் சிறை வைக்கப்பட்டுள்ள ஈழத் தமிழர்களை விடுதலை செய்யக்கோரியும் கருத்துரை வழங்கினார்.

சென்னை நினைவரங்கத்தில் தமிழ்த் தேசப் பொதுவுடைமைக்கட்சி சார்பில் மாலை 4 மணியளவில் தமிழ்த் தேசிய எழுச்சி நாள் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இவ்வார்ப்பாட்டத்தில் தமிழகத்தில் வெளியாரை வெளியேற்று ! முகாமிலுள்ள தமிழர்களை விடுதலை செய் என்பன போன்ற பல்வேறு முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

இவை தவிர சிதம்பரம், ஈரோடு, மதுரை, ஓசூர், திருச்சி, கோவை, திருத்துறைப்பூண்டி, புதுச்சேரி, சேலம், ஆத்தூர், வேலூர் ஆகிய இடங்களிலும் தமிழ்த்தேசிய எழுச்சி நாள் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. பல்வேறு தலைவர்களும் இவற்றில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினர். (ஓ-6)

## நுண்ணறிவு தேடலுக்கான திகதி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

மாணவர்களின் பொது அறிவு நுண்ணறிவு வளர்ச்சிக்காக யாழ். நகர் மைய றோட்ட றக்ட் கழகம் நடத்தும் பொது அறிவு நுண்ணறிவு தேடலிற்கான பரீட்சை 12 இற்குரிய விடைகளை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க எதிர்வரும் 30 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக றோட்டறக்ட் கழக உபதலைவர் எஸ். சைலஜன் தெரிவித்துள்ளார். (6-134)

## இலவச தையல் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

மகளிருக்கான இலவச தையல் பயிற்சி நாயன் மார் கட்டு பாரதி மன்ற சன சமூக நிலையத்தினரால் நடத்தப்பட வுள்ளதாக நிலையத் தலைவர் இ. மயில்வாகனம் தெரிவித்துள்ளார்.

இப்பயிற்சி ஆறு மாதகாலம் வரை நடை பெறவுள்ளது. இப் பயிற்சியில் சேரவிரும்புவோர் தங்கள் விண்ணப்பங்களை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கிடையில் நிலையச் செயலாளரிடம் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (6-134)

## இரத்தானமுகாம்

(யாழ்ப்பாணம்)

கைச் செஞ்சிலுவைச் சங்க வலி. கிழக்கு கோப்பாய் ...ம கோப்பாய் லயன்ஸ் கழகமும்இணைந்து இரத்தான ...மொன்றை நடத்தவுள்ளதாக இலங்கைச் செஞ்சிலு...வச் சங்க வலி.கிழக்கு பிரிவின் தலைவர் இ.மயில் வாகனம் தெரிவித்துள்ளார்.

இவ் இரத்தான நிகழ்வு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் கோப்பாயில் நடைபெறவிருப்பதால் இரத்த தானம் வழங்க விரும்புவோர் தங்கள் பெயர் விபரங்களை எதிர்வரும் 15ஆம் திகதி க்கு கிடையில் செஞ்சிலுவைச் சங்க கோப்பாய் பிரிவு அலுவலகத்தில் பதிவு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது. (6-134)

## தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு ; பிரேரணை சமர்ப்பிக்க ரணில் இணக்கம்

(கொழும்பு)

தோட்டத்தொழிலாளர்களின் அடிப்படை நாட் சம்பளமாக 500 ரூபாவுக்குக்குறையாமல் பெற்றுக்கொடுப்பதற்கு ஐக்கிய தேசிய கட்சியின் இலங்கைத் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

நேற்று வியாழக்கிழமை ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துத் தாம் இதனை வலியுறுத்தியதாகத் தொழிலாளர் தேசிய சங்கத்தின் சார்பில் சந்திப்பில் கலந்துகொண்ட மத்திய மாகாண சபை உறுப்பினர் உதயகுமார் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின் போது தோட்டத்தொழிலாளர்களின் சம்பள விடயம் தொடர்பில் ஐக்கிய தேசிய கட்சியின் ஊடாக நாடாளுமன்றத்தில் பிரேரணை ஒன்றினை சமர்ப்பிக்குமாறு விடப்பட்ட கோரிக்கையையும் எதிர்க்கட்சித்தலைவர் ஏற்றுக்கொண்டதாக உதயகுமார் மேலும் தெரிவித்தார். (ஓ-6)

## தொலைக்காட்சி ஒளிபரப்பில் டிஜிற்றல் தொழில் நுட்பம்

(கொழும்பு)

இலங்கையில் தொலைக்காட்சி ஒளிபரப்பில் டிஜிற்றல் தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தவுள்ளது.

இதற்காக வெகுஜன ஊடக மற்றும் தகவல் அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார். (ஓ-9)

## வெள்ளி நற்சிந்தனை 86

# பக்தியின் மொழி தமிழ்

மலை வளங்களில் உயர்ந்த நவமணிகளும் அடங்கும் மக்களுடைய அணிகலன்களிலே விலை மதிப்புடன் இடம் பெறும் நவமணியைப் பற்றி விலங்குகள் அறியமாட்டா. மண்ணுள்ளே புதைந்து கிடக்கும் மணியை சிலவேளைகளில் பன்றிக்கூட்டம் வெளிக்கொணரும். பன்றிக் கூட்டம் நிலத்தைக் கிளரும் போது மணிகள் வெளியே வந்து ஒளியைக் காலும். அந்த ஒளியைக் நெருப்பின் ஒளி எனக்கருதி மலைச்சாரலிலே திரிகின்ற கரடி, மான், மரைக்கூட்டமும், மயிலும் ஏனையவையும் எல்லாம் ஓடும். வண்டுகள் தேன் உண்ணுகின்ற பொழில்களாற் சூழப்பட்டதாக சீபர்ப்பத மலை இருக்கிறது. இயற்கை வளத்தோடு இருக்கும் இந்த மலையை பற்றிய சுந்தரர் பாடல்கள் பக்தி நெறிக்கு ஒரு புதிய வழியைக் காட்டுபவை.

உலகில் வாழும் உயிரினங்கள் தாம் வாழும் நிலத்தின் இயல்புக்கேற்ற வாழ்வியலைக் கொண்டிருக்கின்றன. தமது உணவுப் பழக்கத்தையும் அங்கு கிடைக்கும் விளைபொருட்களுக்கு ஏற்ப மேற்கொண்டுள்ளன. மலைப் பிரதேசத்தில் உள்ள பொழில்களிலே தேன் நிறையக்கிடக்கும். சீபர்ப்பத மலையிலே வாழும் விலங்குகள் அங்கு கிடைக்கும் தேனை உண்டு வாழும் இயல்புடையவை. இறைவனுடைய கொடையால் மகிழ்வாக வாழ்வு நடத்துகின்றன. மலைச் சாரலிலே அவை ஒன்றாகத் திரியும் காட்சி சுந்தரருக்கு இறைவன் பெருங் கருணையை நினைவுக்குக்கொணர்கின்றது. பயம் ஏற்படும் போதெல்லாம் இறைவனை உள்ளத்திலே நினைந்தால் அது அகன்று விடும். மணிகளின் ஒளியைக் கண்டு பயந்த விலங்குகள் முதலில் பயப்படுகின்றன. ஆனால் பின்னர் மகிழ்வாக வாழ்வு நடத்துகின்றன. இயற்கையோடு இயைபுபட்டு வாழ்ந்தால் வாழ்க்கை துன்பமின்றிக் கழியும் என்ற நம்பிக்கை சீபர்ப்பத மலையிலே வாழும் விலங்குகளைப் பார்த்த போது சுந்தரருக்கு ஏற்படுகின்றது. அதனால் தான் இப் பதிகத்திலே இறைவனைப் பற்றிய செய்திகளை பற்றி அதிகம் குறிப்பிடாமல்

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

இயற்கையான விலங்கு வாழ்வைப்பற்றியே அதிகமாக குறிப்பிட்டுப் பாடியுள்ளார்.

வாழ்க்கையில் எப்போதும் மகிழ்ச்சியையே எதிர்பார்த்த சுந்தரருக்கு இறைவனுடைய கருணை பற்றிய தெளிவு சீபர்ப்பத மலையிலே கிடைக்கிறது. இயற்கையின் ஒழுங்கில் இறைவனுடைய அருட்டிறத்தை உணர்ந்து கொள்கிறார். எமக்குத் தேவையானவற்றை இறைவன் தருவான் என்ற நம்பிக்கை ஏற்படுகின்றது. அதனால்தான் கா... படிய பதிகத்தின் 10ஆவது பாடலில் இப்பாடல்க... ...வர் விரைவாகச் சென்று வானகம் ஆண்டு அங்கிருப்... ...எனக் கூறுகிறார். இறைவனடியைச் சேர்வதே உலக வாழ்வியலில் உன்னதமான இலக்கு என்பதை சுந்தரர் உணர்ந்த போது அதனை எல்லோரும் உணரப் பாடல்களிலே பாடியுள்ளார்.

"ஏனத்திரள் கிளைக்க எரி போல மணி சிதறத்
தீயென்று அவை மலைச்சாரலில் திரியும் கரடியும்
மானும் மரையினமும் மயில் மற்றும் பலவெல்லாம்
தேன் உண் பொழில் சோலை மிகு சீபர்ப்பத மலையே"

# இன்டர்நெட் எக்ஸ்புளோரர் புதிய வசதிகள்

(சென்றவாரத் தொடர்ச்சி)

**யாஹூ சேர்ச் இஞ்சினுக்கு தொடர்பு ஏற்படுத்த:**

நீங்கள் அடிக்கடி யாஹூ சேர்ச் இஞ்சினை உங்கள் தேடலுக்குப் பயன்படுத்துகிறீர்களா! இன்டர்நெட் எக்ஸ்புளோரர் பதிப்பு 8 இல் இதற்கான தொடர்பை உருவாக்கலாம். இதற்கு முதலில்

http://www.ieaddons.com/en/details/816/Yahoo_Search_Suggestions/ என்ற முகவரியில் உள்ள தளத்திற்குச் செல்லவும்.அங்கு "Add to internet Explorer" என்ற பட்டனில் கிளிக் செய்திடவும். இப்போது "Add Search Provider" என்ற டயலொக்பொக்ஸ் கிடைக்கும்.அதில் உள்ள தகவல்கள் சரியானது தானா என்பதை உறுதிசெய்திடவும். அதன் பின் நீங்கள் விரும்பினால் "Make this my default search provider"

என்பதனையும் தேர்வு செய்திடவும். பின் "Use search suggestions from this provider" என்று இருப்பதில் உள்ள ரிக் அடையாளத்தை எடுத்துவிடவும். அதன் பின் "Add" என்ற பட்டனில் கிளிக் செய்திடவும். பின் Search Options என்ற பட்டனை அழுத்தி அதில் யாஹூ என்பதனைத் தேர்வு செய்திடவும். இனி உங்கள் இன்டர்நெட் எக்ஸ்புளோரர் தளத்தில் யாஹூ சேர்ச் பொக்ஸ் கிடைக்கும். அதில் தேவையான டெக்ஸ்ட் டைப் செய்து தேடலாம். முடிவுகளும் அறிவிக்கப்படும்.

3.ஹோம் பட்டனில் பல தளங்கள் பொதுவாக பிரவுசர் ஒன்றில் நாம் காணவிரும்பும் அல்லது தொடக்கத்தில் பயன்படுத்த விரும்பும் தளத்தினை ஹோம் பேஜாக அமைத்து, பிரவுசர் திறக்கையில் அதனையே முதல் பேஜாக அமையும்படி அமைத்திருப்போம். இன்டர்நெட் எக்ஸ்புளோரரில் இந்த ஹோம் பட்டனை அழுத்தினால் பல இணையத் தளங்கள் ஒரே நேரத்தில் தோன்றும்படி அமைக்கலாம்.

இவை அனைத்தையும் ஒரே நேரத்தில் தேவை இல்லை என்றால் அடுத்தடுத்து ஹோம் பட்டன் அழுத்தி இவற்றைப் பெறலாம்.

◆ இன்டர்நெட் ஒப்ஷன்ஸ் டயலொக் பொக்ஸைத் திறக்கவும்.மெனு பாரில் "Tools" Internet Options" எனச் சென்றால் இதனைப்பெறலாம்.கொமண்ட் பார் திறந்திருந்தால் டூல்ஸ் பட்டனழுத்தி அதில் இன்டர்நெட் ஒப்ஷன்ஸ் என்பதனைத் தேர்ந்தெடுக்கவும்.இந்த இரண்டு பாரும் இல்லை என்றால் ஓல்டி + ரி -(Alt+T)அழுத்திப் பின் ஓ(O) அழுத்தவும்.




◆ இன்டர்நெட் ஒப்ஷன்ஸ் என்னும் பல டேப்கள் அடங்கிய டயலொக் பொக்ஸ் கிடைத்தவுடன் அதில் "General" என்ற டேப் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதை உறுதி செய்திடுங்கள்.

◆ ஹோம் பேஜ் என்று இருக்கும் இடத்தில் கீழாக ஒவ்வொரு ஹோம் பேஜின் முகவரியையும் டைப் செய்திடவும்.ஒவ்வொரு யு.ஆர்.எல்.டைப் செய்தவுடன் என்டர் தட்டி அடுத்த வரியில் அடுத்ததனை அமைக்கவும்.

◆ ஒரு குறிப்பிட்ட ஹோம் பேஜினை டிபோல்ட் ஹோம் பேஜாக கிடைக்குமாறு "Tabs" அமைக்க என்பதன் கீழாக உள்ள "Settings" பட்டனை அழுத்தவும்.

◆ இதில் "Open only the first home page when Inter net Explorer starts" என்பதில் ரிக் அடையாளம் ஏற் படுத்தவும்.

◆ ஓகே கிளிக் செய்து டயலொக் பொக்ஸ்களை மூட வும்.

◆ யு- ட்யூப் தள த்தை இன்டர்நெட் எக்ஸ்புளோரரில் செக் செய்திட: இன் டர்நெட் எக்ஸ் புளோ ாரர் அல்லது வேறு பிரவுசர்களில் இணையத் தளம் ஒன்றைப் பார்த்துக் கொண்டிருக்கையில் ஏதேனும் ஒரு பாடல் அல்லது வீடியோ கிளிப் தென்பட்டால் இதேபோன்று வேறு ஏதேனும் தளம் யு-ட்யூப் பில் இருக்குமோ என்று பார்க்க நாம் விரும் புவோம். இதற்கு சம்பந்தப்பட்ட டெக்ஸ்ட் டினை கொப்பி செய்து யு-ட்யூப் தளம் திறந்து பின் அதனை சேர்ச் பாரில் பேஸ்ட் செய்து என்டர் தட்டிக் காண--லாம்.

இதற்குப் பதிலாக இன்டர்நெட் எக்ஸ்பு ளாரர் தொகுப்பிலேயே இந்த வசதியை ஏற்படுத்தலாம்.இதை ஒரு அக்ஸிலரேட்டர் மூலம் மேற்கொள்ளலாம்.

◆ முதலில் இன்டர்நெட் எக்ஸ்புளோரர் பதிப்பு 8லிருந்து கீழ்க்காணும் முகவரியில் உள்ள தளத்தைத் திறக்கவும்.http://www.ieaddons.com/en/details/photosvideos/Youtube_Search/

◆ இதில் Add to Internet Explorer என்ற பட்டனில் கிளிக் செய்திடவும்.

◆ இதில் கிடைக்கும் அக்ஸிலரேட்டர் தகவல் சரி என்பதை உறுதிசெய்திடவும். அடுத்து Add பட்டனைக் கிளிக் செய்திடவும். இனி அடுத்து ஒரு இணையத் தளத்தைப் பார்க்கையில் எந்த டெக்ஸ்ட் சம்பந்தமாக யு-ட்யூப் வீடியோ இருக்கிறதா என்று பார்க்க வேண்டுமோ அதனைத் தேர்ந்தெடுக்கவும்.

பின் புளு கலரில் இருக்கும். அக்ஸிலரேட்டர் பட்டனில் கிளிக் செய்திடவும். அதில் "AllAccelerators" என்பதனைத் தேர்ந்தெடுக்கவும். அதன்பின் "Search Youtube" என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.

இந்த பட்டன் மீது உங்கள் மவுஸ் கேர்சரைக் கொண்டு போய் சுழன்று வந்தாலே அதில் முடிவுக ளின் முன் னோற்றக் காட்சி ஒன்று பாப் அப் மெனு ஒன்றில் காட்டப்படும்.

புதிய டேப் ஒன்று திறக்கப்பட்டு சார்ந்த தளங்களின் பட்டியல் கிடைக்கும். உங்களுடைய டிபோல்ட் வீடியோஸ் அக்ஸிலரேட்டராக யு-ட்யூப்பினை செட் செய்திடலாம். இதற்கு வெப் பேஜின் காலி இடத்தில் ரைட் கிளிக் செய்திடவும். கிடைக்கும் மெனுவில் "AllAccelerators"என்பதனைத் தேர்ந்தெடுக்கவும்.பின்''Manage Acceler arators'' என்பதனைத் தேர்ந்தெடுக்கவும்.

இப்போது"Manage Addons'' என்ற டயலொக் பொக்ஸ் கிடைக்கும். இங்கு ஸ்குரோல் செய்துVideos என்ற பிரிவிற்குச் செல்லவும்.அதில் Search You Tube என்பதில் கிளிக் செய்திடவும். அடுத்து Set as Defaul tபட்டனில் கிளிக் செய்திடவும். பின்Close பட்டன் அழுத்தி உங்களுடைய செட்டிங்ஸை சேவ் செய்து மூடவும். இனி உங்களுடைய தேடலுக்கான டெக்ஸ்ட் செலக்ட் செய்து, பின் புளு அக்ஸிலரேட்டர் பட்டனில் கிளிக் செய்து, உடனே சேர்ச் யு ட்யூப் தேர்ந்தெடுத்து தேடலாம். (முற்றும்)




# கணனிக்கு புதியவரா நீங்கள்!

கணனி பயன்பாட்டில் அடிக்கடி நாம் கேட்கும் சில கலைச் சொற்களும் அவற்றிற்கான சுருக்கமான விளக்கமும் கீழே தரப்பட்டுள்ளன.

**டபுள் லேயர் (Double Layer)**

டிவிடி ஒன்றில் இரண்டு அடுக்குகளில் தகவல்கள் பதியப்படுவதனை இச் சொல் லால் குறிக்கிறோம். எனவே வழக்கமான டிஸ்க்குகளின் கொள்ளவுக்கு பதிலாக இவ்வகை டிவிடிக்களில் 8.5 ஜிகாபைட் வரை இதில் தகவல்களைப் பதியலாம்.

**ஹார்ட் டிஸ்க் (Hard Disk)**

உயர்ந்த திறன் மற்றும் அமைப்பு கொண்ட டிஸ்க். அனைத்துக் கணனி களிலும் இணைந்து தரப்படும்.இதில் தான் ஒப்பரேட்டிங் சிஸ்டங்களும் நீங்கள் உரு வாக்கும் பைல்களும் பதியப்படும்.



**ஸ்ட்ரீமிங் (Streaming)**

எந்த வித வயர் இணைப்புமின்றி ஓடியோ மற்றும் வீடியோபைல்களை அதனை ஏற்றுக்கொள்ளும் சாதனத்திற்கு கணனி ஒன்றிலிருந்து அனுப்பப்படும் தொழில்நுட்பத்துக்கு இந்தப் பெயர் தரப்பட்டுள்ளது.

**ஐ.பி.அட்ரஸ் (IP Address)**

கணனி நெட்வேர்க் மற்றும் இன்டர் நெட்டில்இணைக்கப்பட்டுள்ள ஒரு கணனிக்கு அடையாளம் தரும் முகவரி எண்.

**மதர்போர்ட் (Motherboard)**

பேர்சனல் கணனியில் உள்ள மெயின் சர்க்யூட் போர்ட். இதனுடன் மொனிட்டர், கீபோர்ட், மவுஸ்,பிரிண்டர்,மொடம் போன்ற சாதனங்கள் இணைக்கப்பட்டு இயங்குகின்றன.

**அட்டாச்மென்ட் (Attachment)**

இமெயில் மெசேஜ் உடன் இணைந்து அனுப்பப்படும் ஒருபைல். இந்த பைல் எதுவாக வேண்டுமானாலும் இருக்கலலாம். படங்கள், பாடல்கள், எம்.எஸ்.ஒபீஸ் பைல்கள், சுருக்கப்பட்ட ஸிப் பைல்கள் என எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம்.ஒரு சில இமெயில் கிளையண்ட் புரோகிராம்கள் அவற்றின் வழியே அனுப்பப்படும் அட்டாச்மென்ட் பைல்களுக்கு அதிக பட்ச அளவை வைத்துள்ளன. மேலும் மிகப் பெரிய அளவிலான பைல்களை இணைத்து அனுப்புகையில் அவற்றை அனுப்பும் நேரமும் டவுண்லோட் செய்திடும் நேரமும் அதிகமாகும்.

**கிளையண்ட் (Client)**

கணனி நெட்வேர்க்கில் இணைக்கப்பட்டு சேர்வராக இயங்காமல் பயன்படுத்தப்படும் இந்த கணனி கிளையண்ட் என அழைக் கப்படும்.

**டெக்ஸ்டாப் (Desktop)**

மொனிட்டர்திரையில் பைல்களையும் ஐகன்களையும் படங்களாகக் காட்டும் இடம். இதனைக் கொண்டு தான் மேசையில் வைத்து இயக்கப்படும் கணனி Desktop Computer எனஅழைக்கப்படுகின்றது.

**டயலொக் பொக்ஸ் (Dialogue Box)**

கணனி பயன்பாட்டின் போது நம்மிடமிருந்து தகவல்களைப் பெற்று இயங்கும் விண்டோஸ் இயக்கத்தில் எழுந்துவரும் ஒரு தகவல் கேட்புக் கட்டம். தேவைப்படும் தகவல்களை தர இதில் தயாராக படிவம் போல வடிவமைக்கப்பட்டிருக்கும்.

**டொக்(Doc)**

இது ஒரு பைலின்பெயரில் உள்ள துணைப் பெயர்.இந்த பெயருடன் உள்ள பைல் மைக்ரோசொப்ட் வேர்ட் தொகுப்பில் உருவான பைல் என்பதனை இது குறிக்கிறது.

**டொமைன் நேம் (Domain Name)**


இன்டர்நெட்டில் உள்ள தகவல் தளங்களை இச் சொல்லால் குறிப்பிடுகின்றனர். அந்தத் தளத்தின் பெயரை இது குறிக்கிறது.

**டவுண்லோட் (Download)**

கணனி ஒன்றிலிருந்து நேரடியாக இன்னொரு கணனிக்கு பைலை மாற்றுவதனை டவுண்லோட் எனக் குறிப்பிடுகிறோம்.இருப்பினும்இன்டர்நெட் நெட்வேர்க்கில் இணைந்துள்ள கணனியிலிருந்து ஒரு பைல் இறக்கிப் பதியப்படுவதனையே இது பெரும்பாலும் குறிக்கிறது. (தொடரும்)

# கூப்பேஸ் வைரஸ் தாக்கும் ஜாக்கிரதையாக இருங்கள் !

பேஸ்புக், ட்விட்டர், மைஸ்பேஸ், பெபூ, ப்ரண்ட்ஸ்டர் மற்றும் எச் 5 போன்ற சமுதாய இணையத்தள நெட்வேர்க்குளைப் பயன்படுத்துபவரா நீங்கள்! அப்படியானால் அண்மைக்காலத்தில் வேமாகப் பரவி வரும் கூப் பேஸ் (Koobface) வைரஸ் குறித்து ஜாக்கிரதையாக இருங்கள்.



இந்தத் தளங்களின் பேரில் உங்களைத் தூண்டும் மெசேஜ் ஒன்று உங்களுக்கு இமெயில் வழியாக அனுப்பப்படுகிறது.அதில் குறிப்பிட்ட வீடியோ ஒன்றை டவுண்லோட் செய்து பார்க்குமாறு உங்களைக் கேட்டுக் கொள்ளும் தூண்டில் செய்தி ஒன்று கிடைக்கும்.

வீடியோவிற்கான லிங்க்கைக் கிளிக் செய்தால் யு-ட்யூப் போலத் தளம் ஒன்று திறக்கப்படும்.அங்கே ஒரு வீடியோக் காட்சி ஒன்று உள்ளதென்றும், அதனைக் காண சொப்ட்வெயர் புரோகிராம் ஒன்றை இறக்கிக் கொள்ள வேண்டும் என அறிவிக்கப்பட்டு அதற்கான லிங்க் கொடுக்கப்படும்.

இதற்கு யெஸ் என அழுத்தினால், உங்கள் கணியில் உங்களுடைய பெர்சனல் தகவல்களைத் திருடிஅனுப்பும் புரோகிராம் ஒன்று இறங்கி அமர்ந்து கொள்ளும்.பின் உங்களின் யூசர் நேம்,பாஸ்வேர்ட், வங்கி சார்ந்த தகவல்கள் அனைத்தும் திருடப்பட்டு அனுப்பப்படும்.

ஏற்கனவே இந்த வைரஸ் புரோகிராம் உங்களுடைய கணனியில் மேலே சொன்ன நடவடிக்கைகளினால் இருக்கிறது என்று சந்தேகப்பட்டால் உடனே இந்த கூப் பேஸ் வைரஸ் குறித்த அனைத்து வரிகளையும் ரெஜிஸ்ட்ரியிலிருந்து நீக்கவும். உங்கள் அண்ட்டி வைரஸை அப்டேட் செய்து கணனியை முழுமையாகச் சோதனை செய்திடவும்.



வவுனியாவிலிருந்து நேற்று யாழ்ப்பாணத்திற்கு அழைத்துவரப்பட்ட இந்து குருமார்களின் குடும்பத்தினரை யாழ். பஸ்நிலையத்தில் வைத்து நேற்றிரவு 11.00 மணியளவில் யாழ். அரச அதிபர் பொறுப்பேற்பதையும், விடுவிக்கப்பட்ட இந்துக் குருமார்களின் குடும்பத்தினரையும் படங்களில் காணலாம்.

# பசில் எம்.பியின் அழைப்பின் பேரில் பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகர் யாழ்.விஜயம்

(யாழ்ப்பாணம்)

பிரித்தானியாவின் உயர்ஸ்தானிகர் கலாநிதி பீற்றர் கெய்ஸ்,நாடாளுமன்ற உறுப்பினர் பசில் ராஜபக்ஷவின் அழைப்பின் பேரில் நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தார்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயத்தை மேற்[illegible]ண்ட அவர் ஐக்கியராச்சிய அரசாங்கத்தால் யாழ்ப்பாணத்தில் கட்டப்பட்ட பாலத்தை பசில் ராஜபக்ஷவுடன் சென்று பார்வையிட்டுள்ளதுடன் யாழ்.அரச அதிபருடன் கலந்துரையாடியுள்ளார்.

அத்துடன் யாழ்ப்பாணத்தில் ஆசிரியர்களுக்கான ஆங்கில மொழி பயிற்சியை வழங்குவதற்கும் உறுதிமொழி அளித்துள்ளார்.

அவர் அங்கு உரையாற்றுகையில்;

யாழ்.மாவட்டத்திலுள்ள மக்கள் நீண்டகால யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர். தற்போது சமூக, பொருளாதார அபிவிருத்தியை மேற்கொண்டு முன்மாதிரியான வாழ்விற்கு இட்டுச் செல்வதற்கு இது ஒரு நல்ல தருணமாக அமைந்துள்ளது.

பாலங்களை அமைப்பது, யாழ்ப்பாண மக்களை இலங்கையின் ஏனைய பகுதி மக்களுடன் இணைப்பதற்கு உதவும். ஆனால் யாழ்ப்பாணத்தில் ஆங்கிலப் பயிற்சி வழங்குவது யாழ்ப்பாண மக்களை உலக மக்களுடன் தொடர்புபடுத்த உதவும்.

ஆசிரியர்களுக்காக 15 பயிற்சியாளர்களுக்கு முதற்கட்டமாக பயிற்சி வழங்கப்படும். பின்பு அவர்கள் ஊடாக 150 குடாநாட்டு ஆசிரியர்களுக்கு பயிற்சியை வழங்க பிரிட்டிஷ் கவுன்சில், கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிறுவனம், கல்வித் திணைக்களங்கள், வலயக் கல்வி அலுவலகங்கள், பிராந்திய ஆங்கில உதவி மையங்களின் உதவியுடன் இத் திட்டத்தை நிறைவேற்றும்.

அத்துடன் 1932 இல் ஆரம்பிக்க ப்பட்ட ஏ-32 வீதியில் உள்ள சங்குப்பிட்டி-யாழ்ப்பாணத்திற்கும் இடையிலான 288 மீற்றர் நீளம் உடைய பாலத்தை புனரமைக்க உறுதி அளிக்கப்பட்டுள்ளது என்றார். (ச-7)

## பட்டதாரிகளுக்கு பதிவிலக்கம் வழங்கல்

யாழ்.மாவட்ட பட்டதாரிகள் சங்க உறுப்பினர்களுக்கான பதிவு இலக்கம் வழங்குகின்ற நிகழ்வு நாளை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருப்பதால் இந்நிகழ்விற்கு யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் அனைவரையும் சமுகம் கொடுக்குமாறு பட்டதாரிகள் சங்கம் அறிவித்துள்ளது. (ச)

## கிரிக்கெட் போட்டி

(ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழகம், அடைக்கலநாயகி ஆலய திருவிழாவை முன்னிட்டு நடத்தும் 7 பேர் கொண்ட விலகல் முறையிலான கிரிக்கெட் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும்.

இப் போட்டியில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நாமகள் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (ச-3)

## தமிழ் இளைஞர் கடத்தப்பட்டுள்ளார்

(புத்தளம்)

புத்தளம் மாம்புரியில் உள்ள குடியிருப்பு ஒன்றில் இருந்து இளைஞர் ஒருவரை முச்சக்கர வண்டியில் வந்த அடையாளம் தெரியாத சிலர் கடத்திச் சென்றுள்ளனர்.

இது தொடர்பாக புத்தளம் பொலிஸ்நிலையத்தில் கடத்தப்பட்டவரின் மனைவி முறைப்பாடு செய்துள்ளார்.கடத்தப்பட்டவர் சிக்சன் கிசோர்க்குமார் என்ற 31 வயதுடைய வர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடத்த வந்த அடையாளம் தெரியாதவர்கள் குடியிருப்புக்கு முன்இருந்து கிசோக்குமாரை அழைத்து பலவந்தமாக முச்சக்கர வண்டியில் ஏற்றி கடத்திச் சென்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## கணனிப் பயிற்சி நிலையத் திறப்பு விழா

கணபதீஸ்வரக் குருக்கள் நூலக மற்றும் கணனிப்பயிற்சி நிலைய திறப்புவிழா நாளை சனிக்கிழமை முற்பகல் 11.15 மணிக்கு காரைநகர் வியாவில் ஐயனார் தேவஸ்தானத்தில் ஆலய அறங்காவலர் க.சோமசேகரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

திறப்பு விழாவிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு காரைநகர் வியாவில் ஐயனார் தேவஸ்தானத்தினர் அறிவித்துள்ளனர். (ச-14)

# யாழ். மாவட்ட 17 வயதுப்பிரிவு கிரிக்கெட் அணி அறிவிப்பு

## திருமலையில் அடுத்த மாதம் சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா கிரிக்கெட்டின் அனுசரணை[illegible]ன் வருடாந்தம் நடைபெறும் வடக்கு-கிழக்கு மாவட்டங்களுக்கிடையிலான 19 வயது பிரிவினருக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டி எதிர்வரும் முதலாம் திகதி திருகோணமலையில் ஆரம்பமாகிறது.

இச்சுற்றுப் போட்டியில் யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு ஆகிய நான்கு மாவட்ட அணிகள் மோதுகின்றன.

இச் சுற்றுப் போட்டிக்கான யாழ். மாவட்ட17 வயதுப் பிரிவு கிரிக்கெட் அணியை யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கம் தெரிவுசெய்துள்ளது.

இவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட யாழ். மாவட்ட 17 வயதுப்பிரிவு கிரிக்கெட் அணி விபரத்தினை நேற்று யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்க செயலாளர் ஏ.எஸ். நிஷாந்தன் அறிவித்துள்ளார்.

அணி விபரம் வருமாறு;

விவேகானந்தராஜா ஹரிவதனன் (அணித் தலைவர்- யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி), இரட்ணம் எட்வேட் எடின் (துணை அணித் தலைவர்-யாழ். மத்திய கல்லூரி), ஞானசீலன் ஜெரிக்து[illegible]ான் (யாழ். மத்திய கல்லூரி), தங்கரா[illegible] கோகுலன் ( யாழ். மத்திய கல்லூரி), பாக்கியநாதன் ஸ்ரீகுகன் (வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி), குருபர சோதிநாதன் பிரசோபன் (வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி), சிவசண்முகநாதன் சீராளன் (வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி), சகாஜராஜா ஜோன்சன் சஞ்ஜீவ் ராஜ் (யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி), ஜூலியன் பற்றிக் எரிக்பிரதாப் (யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி), அந்தோனிராஜா கவாஸ்கர் (யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரி), குலவீரசிங்கம் ஜனுதாஸ் (கொக்குவில் இந்துக் கல்லூரி), கமலயோகேஸ்வரன் இராகுலன் (கொக்குவில் இந்துக்கல்லூரி), யோகநாதன் கபில்ராஜ் (பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி), சத்தியமூர்த்தி சஞ்ஜீவன் (யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி), சிங்கராஜா டுக்ஷன் (யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி). (5)

# ஜெய்க்கா அமைப்பின் பிரதிநிதிகள் நாளை யாழ்ப்பாணத்துக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையின் அபிவிருத்திக்கென 2 ஆயிரத்து 500 மில்லியன் ரூபாயை வழங்க ஜெய்க்கா நிறுவனம் முன் வந்துள்ளது.

இது தொடர்பாக ஆராய அந்த அமைப்பின் குழுவொன்று நாளை யாழ்ப்பாணத்திற்கு வரவுள்ளது. யாழ். வரும் அக்குழுவினர் யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளருடன் இது தொடர்பாக கலந்துரையாடவுள்ளனர்.

யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகத்தினர் விடுத்த வேண்டுகோளை ஏற்று ஜெய்க்கா நிறுவனம் உதவமுன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# வவுனியாவிலிருந்து செல்வோர் மீது மதவாச்சியில் கடும் சோதனை

(வவுனியா)

வவுனியாவில் இருந்து கொழும்பிற்கு செல்லும் பயணிகளை படையினர் மதவாச்சி சோதனை சாவடியில் கடுமையான விசாரணைக்கு உட்படுத்தி வருவதாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

விசாரணையின் போது பெண்கள் படையினரால் இம்சைப்படுத்தப்படு வதாகவும் இளைஞர்கள் விசாரணை என்ற பெயரில் தடுத்து வைக்கப்படுகின்றனர் என்றும் பாதிக்கப்பட்டவர்கள் மனித உரிமை ஆணைக் குழுவில் தமது முறைப்பாட்டை பதிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை கொழும்புக்கு வரும் தமிழர்கள் மதவாச்சி சோதனை சாவடியில் படையினரின் கெடுபிடிகளுக்கு உள்ளாவதாக முறைப்பாடுகள் பதிவாகியுள்ளது என்று இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவின் சட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கொழும்பில் பல பகுதிகளில் தொடர்ந்து தேடுதல் நடவடிக்கைகள் இடம்பெற்றுவருவதாகவும் தமிழர்கள் பலர் விசாரணையை உட்படுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

# அரசியல் தீர்வை வழங்கு...

இதனைத் தெரிவித்தார். அங்கு அமைச்சர் மேலும் உரையாற்றுகை யில், நீண்ட காலமாக நீங்கள் எதிர்பார்த்த பழைய நிலைமைகள் தற்போது கிடைத்துள்ளன.

இச் சந்தர்ப்பத்தை சரியாக பயன்படுத்த வேண்டும். சந்தர்ப்பங்கள்இருந்த போது கடந்த காலத்திலிருந்த ஜனநாயகத் தலைமைகளோ ஆயுதப் போராட்டம் நடத்திய தலைமைகளோ சரியாக அதனை பயன்படுத்தவில்லை.

தற்போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமிழ் மக்களின் வாழ்க்கையை முன்னேற்றுவதிலும் சிறந்த அரசியல் தீர்வை வழங்குவதிலும் தெளிவான நிலைப்பாட்டில் உள்ளார்.

கடந்த 20 வருடங்களில் தேவையற்ற அழிவு யுத்தமே நடைபெற்றது. எனினும் அவற்றிலிருந்து விடுவித்து தற்போது உயிர் வாழும் சுதந்திரம், பேச்சுத் சுதந்திரம் என்பவற்றை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான் அரசு ஏற்படுத்தி கொடுத்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் 13 ஆயிரம் ஏக்கர் நிலங்களில் பயிர் செய்யமுடியாமல் உள்ளது. இதில் அரைவாசி நிலங்களிலாவது வருகின்ற கால போகத்தில் பயிர்ச் செய்கை இடம் பெறவேண்டும்.

இன்னும் இரண்டு வாரங்களில் நான் யாழ்ப்பாணத்திற்கு வருவேன். அப்போது மீத முள்ள விவசாய நிலங்களையும் மீளப் பெற் றுக் கொள்வதற்கான நடவடிக்கையை எடுப்பேன். தற்போது வழங்கப்பட்டுள்ள விவசாய நிலங்களில் உரியவர்கள் காலபோக நெற்செய்கையை மேற்கொள்ளா விட்டால் அந்நிலங்களை குத்தகைக்கு வழங்கி அந் நிலங்களிலும் நெற்செய்கையை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன் என்றார். (ச-5)

# யாழில் ஒருமாத காலத்துக்குள்...

வடக்கின் வசந்தம் செயலணியின் மீளாய்வுக் கூட்டம் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் செயலணியின் தலைவருமான நாடாளுமன்ற உறுப்பினர் பசில் ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றது.

இம் மாநாட்டில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ். அரச அதிபர் க.கணேஷ், பிரித்தானிய உயர்ஸ்தானிகர் பீற்றர் கெய்ஸ், வடக்குமாகாண அமைச்சர்களின் செயலாளர்கள், யாழ். படைத்தளபதிகள், பொலிஸ் அதிகாரிகள் மற்றும் யாழ். திணைக்கள தலைவர்களும் கலந்து கொண்டனர்.

இதில் யாழ். மாவட்டத்தில் வடக்கின் வசந்தம் 180 நாட்கள் வேலைத்திட்டத்தில் இதுவரை நடைபெற்ற அபிவிருத்திட்டங்கள் தொடர்பில் ஒவ்வொரு திணைக்களத் தலைவர்களும் விளக்கமளித்தனர்.

இதில் கடந்த 5 ஆம் திகதி முதல் இதுவரை யாழ். மாவட்டத்தில் ஆயிரத்து 500 குடும்பங்கள் மீள் குடியமர்த்தப்பட்டுள்ளதாக யாழ். அரச அதிபர் க.கணேஷ் மேலும் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

இதில் யாழ்ப்பாணம், வவுனியா நலன்புரி நிலையங்களிலிருந்தும் யாழ்.மாவட்டத்திற்குள் தென்மராட்சி மண்கும்பான் ஆகிய இடங்களிலும் வேறு பகுதியிலும் இடம்பெயர்ந்திருந்த மக்களும் அடங்குவர்

இதில் நலன்புரி நிலையங்களிலிருந்து மீள் குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு உலக உணவுத்திட்டமே நிவாரணப் பொருட்களை வழங்குவதுடன் யூஎன்எச்சிஆர் அமைப்பும் உணவுப் பொருள்பொதி வழங்கியுள்ளது.

தற்போது நலன்புரிநிலையங்களில் இருந்து மீள்குடியமர்த்தப்பட்ட மக்களில் மீனவர்களின் மீன்பிடிப்படகுகள் வெளியிணைப்பு இயந்திரங்கள் என்பன விரைவில் பெற்றுக் கொடுக்கப்படும்எனயாழ். அரசஅதிபர் க.கணேஷ்குறிப்பிட்டார்.

### வீடுகட்டி கொடுப்பதற்கு நடவடிக்கை

இம் மாநாட்டில் மீள்குடியமர்த் தப்பட்ட மக்களுக்கான வசதிகள் ஏற்படுத்தி கொடுப்பது தொடர்பாக அறிவித்த ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் செயலணி தலைவருமான நாடாளுமன்ற உறுப்பினர் பசில் ராஜபக்ஷ, வீடு இல்லாத குடும்பங்களிற்கு வீடு கட்டிகொடுப்பதற்கு அரசு தீர்மானிதுள்ளதாகவும் அதற்காக ஒவ்வொரு குடும்பத்திற்கும் சீமெந்து கூரைசீற் மற்றும் 35 ஆயிரம் ரூபா நிதியும் வழங்கப்படுமென தெரிவித்தார்.

### வலிகாமம் கல்விவலய கட்டடத்திற்கான நிதி

வலிகாமம் கல்வி வலய அலுவலக கட்டிடத்தின் இரண்டாம் கட்ட வேலைகளை மேற்கொள்வதற்கு வடக்கின் வசந்தம் வேலைத் திட்டதின் கீழ் நிக்கோட் திட்டத்தின் ஊடாக நிதி வழங்க செயலணித்தலைவர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

### குளங்கள் புனரமைக்க நிதி ஒதுக்கீடு

கமநல சேவைகள் திணைக்களத்தினால் விவசாயக்குளங்கள் புனரமைப்பதற்கு 26.9 மில்லியன் ரூபாய் நிதியை வழங்கவும் இம் மாநாட்டில் இணக்கம் காணப்பட்டு உடனடியாக வேலைகளை ஆரம்பிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

# அல்லை., மண்கும்பான் மக்கள் மீள் குடியமர்த்தப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

அல்லைப்பிட்டி, மண்கும்பான் ஆகிய பிரதேசங்களிலிருந்து இடம் பெயர்ந்த 221 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் நேற்று மீள் குடியமர்த்தப்பட்டனர்.

நேற்றுக் காலை 9 மணியளவில் யாழ். மத்திய கல்லூரிக்கு முன்பாக மக்கள் கூடியிருந்த போதும் பிற்பகல் 3 மணிக்கே அவர்கள் சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட தாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.அரச அதிபரின் முன்னிலையில் வேலணை பிரதேச செயலரினால் மக்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

அங்கு கொண்டு செல்லப்பட்ட மக்கள் அனை வரும் அல்லைப்பிட்டி யில் வைத்து கடற்படையினரால் பதிவு செய்யப்பட்ட பின்னர் மீள்குடியமர்த்தப்பட்டனர் (ச)

# 2211 குடும்...

தகவல் தருகையில், வவுனியா நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 15 ஆயிரத்து 167 குடும்பங்களின் விபரங்கள் யாழ்.மாவட்ட செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இக் குடும்பங்களின் வதிவிடங்களை உறுதிப்படுத்து வதற்காக யாழ்.மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலாளர்களிற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இதில் 2ஆயிரத்து 211 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 437 பேரின் விபரங்கள் அடையாளம் காணப்பட்டு பிரதேச செயலர்களினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இவ் விபரங்கள் யாழ்.மாவட்ட செயலகத்தினால் பட்டியல் படுத்தப்பட்டு பொலிஸ் பாதுகாப்பு அனுமதிக்காக இன்று அனுப்பி வைக்கப்படும்.

அத்துடன் மன்னார் நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப் பட்டுள்ள யாழ். மாவட்டத்தைச் சொந்த இடமாக கொண்ட 332 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 248 பேரின் விபரங்கள் உறுதிப்படுத்தப்பட்டு பொலிஸ் பாதுகாப்பு அனுமதிக்காக அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ள நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப் பட்டுள்ள 2 ஆயிரத்து 533 குடும்பங்களும் விரைவில் மீள் குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (ச-5)

# பிரிட்டன் அரசிடம் முறையிட...

பிரித்தானிய அரசாங்கத்திடம் தெரிவிக்க விருப்பதாக இலங்கை அமைச்சரவையின் பேச்சாளர் அனுர பிரியதர்சன யாப்பா செய்தியாளர்சந்திப்பொன்றின்போது தெரிவித்துள்ளார்.

இலங்கை படையினர் என்று கூறப்படுபவர் களால் தடுத்துவைக்கப் பட்டிருந்த சிலர் கொல்லப்படுவதாகக் குற்றஞ்சாட்டி ஜேர்மனியிலுள்ள ஜனநாயகப் பத்திரிகையாளர்கள் அமைப்பினால் வெளியிடப்பட்டு பிரித்தானிய சனல் 4 தொலைக்காட்சியில் ஒளி பரப்பப்பட்ட வீடியோ காட்சிகள் இலங்கையில் இடம்பெற்றிருக்கக் கூடிய போர்க்குற்றங்கள் குறித்த சர்வதேச ஆணைக்குழு ஒன்றின் விசாரணை அவசியம் என்பதை கோடிகாட்டுவதாக சர்வதேசமனித உரிமைகள் கண்காணிப்பகம் கூறியுள்ளது.

கடந்த பல வருடங்களாக விடுதலைப் புலிகளிற்கும் படையினருக்குமிடையில் நடந்த போரின்போது இலங்கையில் இவ்விரு தரப்பினராலும் போர்ச்சட்டங்கள் மீறப்பட்டதாக முறைப்பாடுகள் பலவந்த போதும் போர்ப்பகுதிகளில் சுயாதீன கண்காணிப்பாளர்கள் அனுமதிக்கப்படாததன் காரணமாக அவை குறித்த உறுதியான தகவல்களை பெறமுடியாத நிலை காணப்பட்டது என்றும் அந்த அமைப்பு கூறியுள்ளது.

எனவே இரத்தக்களரிமிகுந்த இலங்கைப் போரில் இடம்பெற்ற குற்றங்கள் குறித்து ஆராய சுயாதீனமான சர்வதேச விசாரணை ஆணையம் ஒன்று தேவை என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது (ச-5)

# பிரி.நாடாளு...

மேற்கொண்டிருந்த போதும் அது பலனளிக் கவில்லை.

அமைச்சர் மிலிந்த மொறகொட பிரித் தானியாவுக்கு சென்று திரும்பியதன் பின்னர், இவர் அரசாங்கத்தின் அழைப்பின் பேரிலேயே இலங்கைக்கு வந்திருப்பதாக தெரி விக்கப்படுகிறது. எனினும் உண்மைக் காரணம் எவையும் வெளியாக வில்லை.

இலங்கை அரசாங்கம் தனித்து இயங்கு வதில் பல சவால்களை எதிர் நோக்கியுள்ள நிலையில் எதிர்க் கட்சிகளையும் இணைத்துக் கொண்டு ஆட்சியை கொண்டு செல்வதற்கு முயற்சிக்கும் நிலையிலேயே லியாம் பொக்ஸ் இலங்கை வந்துள்ளதாக கருத்துக்கள் வெளிப் படுத்தப்பட்டுள்ளன. (ச-5)

# 'சனல்-4' இன்...

வெளியிட்டிருக்கிறது. தமிழ் இளைஞர்களை கைது செய்து அவர்களை நிர்வாணமாக்கி கை, கால்கள், கண்களை கட்டி துப்பாக்கியால் சுட்டுக் கொல்லும் பதறவைக்கும் காட்சிகள் வெளியிடப் பட்டிருக்கின்றன.

இந்த ஆதாரங்களைக் கொண்டு இலங்கை அரசு மீது போர்குற்ற வழக்குகள் தொடர வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையில் இந்தியா வலியுறுத்த வேண்டும் என்று மத்திய அரசிடம் முதலமைச்சர் கலைஞர் மு.கருணா நிதி வேண்டுகோள் விடுக்கவேண்டும் என்றார். (ச-5)

# மாவிலாற்றில் ஆரம்பித்த...

தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஒன்றரை வருடங்களுக்கு முன்பு மாவிலாற்றில் படையினரால் ஆரம்பிக்கப்பட்ட மனிதாபிமான சேவை இன்று யாழ். மாவட்ட மக்களுக்கும் கிடைத்துள்ளது. விவசாய நிலங்களை விட்டுக் கொடுப்பது மட்டுமல்லாமல் மக்களுக்கு அதனை வழங்குவதனை விழாவாகவும் நடத்தி வழங்கப்படுகின்றமை பெருமைமிக்கது.

முன்பு ஏற்படுத்தப்பட்ட சமாதான ஒப்பந்தங்கள் மூலம் எவ்வித முன்னேற்றமும் கிடைக்கவில்லை.

ஆனால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் முன்னெடுக்கப்பட்ட மனிதாபிமான நடவடிக்கையினால் மக்களுக்கு முன்னேற்றமான அபிவிருத்தி கிடைத்துள்ளது.

இதற்கு யுத்தத்தில் மரணித்த படைவீரர்களுக்கு நன்றியை இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அத்துடன் சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாணஆளுநர் மேஜர்ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி, யாழ். அரச அதிபர் க.கணேஷ் மற்றும் கமநல சேவைகள் திணைக்கள அதிகாரிகளுக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் விடுக்கப்பட்ட தொடர்ச்சியான வலியுறுத்தல்கள் மூலமே தற்போது இந்த நிலப்பரப்பை உங்களுக்கு விரைவில் வழங்க முடிந்தது.

அத்துடன் இன்னும் பல இடங்களில் நெற்செய்கை மேற்கொள்ளக்கூடிய விவசாயநிலங்கள் உள்ளன. அங்கும் விவசாயத்தில் ஈடுபட வேண்டும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கேட்டுள்ளார்.

எனவே இந்த மாவட்டத்தில் மீள வழங்கப்படாமல் உள்ள 9 ஆயிரத்து 900 ஏக்கர் வயல் நிலங்களையும் விரைவில் விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுப்பேன்.

இதன் மூலம் விவசாய நடவடிக்கைகளினால் யாழ். மாவட்டத்தில் சிறந்த நெல் விளைச்சல்கள் கிடைக்க வேண்டும்.

அதேபோன்று யாழ். மாவட்டத்தில் முந்திரிகை, வெங்காயம் மற்றும்வாழைப்பழம் என்பன உற்பத்தி செய்யப்பட்டு தென் பகுதிக்கு அனுப்பி அவற்றைநாம்உண்ண வேண்டும். அதற்கான சகல வசதிகளும் செய்து கொடுக் கப்படும் என்றார். (ச-5)

# மரண அறிவித்தல்

## நாகலிங்கம் வைத்திலிங்கம் (செல்லக்கண்டு)

வட்டுத்தெற்கு வைரவர் கோவிலடியைப் பிறப்பிடமாகக் கொண்ட நாகலிங்கம் வைத்திலிங்கம் (செல்லக்கண்டு) 27.08.2009 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் மங்கையக்கரசியின் அன்புக் கணவரும் சுமித்ரா, சுதாகரன், நாகலோஜினி, திவ்வியா ஆகியோரின் அன்புத் தந்தையும், நகுலேஸ்வரனின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28.08.2009 வெள்ளிக் கிழமை பிற்பகல் 2 மணியளவில் இடம் பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப் படுகிறீர்கள்.

மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை.

தகவல்
வை. சுதாகரன் (சுதன்)
மகன்

(c-3172)




நீண்டகால இடைவெளியின் பின் மீண்டும் யாழ். நகரில் அழகிய வர்ணப் பைக்கட்டுக்களில் தரத்தில் அதி உயர்ந்த, விலையில் மிகக்குறைந்த, இலங்கையில் முதல் தர பிஸ்கட்டாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் தரம் கொண்ட, லக்கிலாண்ட் பிஸ்கட் தற்போது யாழ். நகரில் நீங்கள் வாங்கிடலாம். விருந்தினர் வீட்டிற்கு வெறுங் கையுடன் செல்வதா? விருப்பமுடன் எடுத்துச் செல்லுங்கள். விலையில் மலிந்து, தரத்தில் சிறந்து, சுவையில் சுந்தரமாய் திகழும் லக்கிலாண்ட் சுவீட் பிஸ்கட் வகைகள்.

லக்கிலாண்ட் உற்பத்திகளோ பல, நீங்கள் அறிந்திட அவற்றிற் சில

லக்கிலாண்ட் கிப்ட் வகைகள்
லக்கிலாண்ட் லெமன் பஃவ்
லக்கிலாண்ட் லெமன் கிறீம்
லக்கிலாண்ட் போர் பொன் சொக்லேட் கிறீம்
லக்கிலாண்ட் சொக்லேட் கிறீம்
லக்கிலாண்ட் பட்டர் கெரோல்
லக்கிலாண்ட் கஸ்ரட் கிறீம்
லக்கிலாண்ட் மாரி, ஜின்ஜர்
லக்கிலாண்ட் நைஸ்
லக்கிலாண்ட் சோட்டீஸ்
லக்கிலாண்ட் பூ, ஜெம் (GEM) என்னும் பல

Manufactured By :
Luckyland
Biscuit Manufactures
Kundasale, Kandy,
Srilanka.

ஏக விநியோகஸ்தர்கள்: சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பேசி. 021 222 2567
(C-2383)

கூரியர் சேவை
ARRUL GLOBAL EXPRESS
அவசர தேவையின் நிமித்தம் பொதிகள் மற்றும் ஆவணங்களை 48 மணி நேரத்தில் அனுப்பும் வசதி
T.P : 0212226113
Mail : arrulgex@gmail.com
இல. 01. பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம்.

விசேட சேவை
லண்டனிலிருந்து மிக விரைவாக இலத்திரனியல் பொருட்கள் பொதிகள் மற்றும் ஆவணங்களை மிக குறைந்த கட்டணத்தில் பெற்றுகொள்ளலாம்.

லண்டன், பிரான்ஸ், கனடா, சுவிஸ் நாடுகளுக்கான 1 Kg கட்டணம் 550/=
அவுஸ்திரேலியா, 1 Kg கட்டணம் 700/=

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.08.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.